வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 10 | பக்கங்கள் : 20

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


08
இன்று தமிழரசு கட்சிக்கு வயது 73


09
இனநெருக்கடிக்கு தீர்வுகாண ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மகாநாடு


10
ரணிலின் சுதந்திர தின 'வெற்றி' உரைக்கு தமிழர் தரப்புடனான பேச்சு வழிவகுக்கும்!


11
குளிர் பலியெடுத்த உயிர்கள்...! காப்பகமே அவசிய தேவை!!

## அமெரிக்க இராணுவம் இலங்கைக்கு வரலாம்!

### யாழில் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 18

"எம்.சி.சி.,சோபா ஒப்பந்தத்தை செய்ய இரகசியமாக வேலை இடம்பெறுகிறது. அவ்வாறான நிலை ஏற்படுமானால் அமெரிக்க இராணுவம் வந்து நிலைமை மோசமாகும். அவர்களுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது."

-இவ்வாறு தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினரும் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்

19

## பாணின் விலை குறைப்பு



கொழும்பு, டிசெ. 18

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக பேக்கிரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 450 கிராம் பாண் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்குறைப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்தது என பேக்கிரி உரிமையாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# கட்டைக்காடு கடற்பரப்பில் தத்தளித்த வெளிநாட்டுக் கப்பல் நேற்றிரவு மீட்பு!

### 130 மியன்மார் நாட்டவர்கள் இருந்தனர் என தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 18

மருதங்கேணி, கட்டைக்காடு கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் இருந்த சிறுவர்கள் உட்பட சுமார் 130 வெளிநாட்டவர்கள் கடற்படையினரால் நேற்றிரவு மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்தது.

19

## கடன் சீரமைப்புக்கு சீனா பச்சைக்கொடி!

கொழும்பு, டிசெ. 18

கடன் மறுசீரமைப்புக்கு சீனா ஒப்புக்கொண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இலங்கை போன்ற நாடுகளுக்கான கடன் நிவாரண வேலைத்திட்

19

## பிரபல வர்த்தகர் ஷாப்டர் கொலை; 23 பேரிடம் இதுவரை வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 18

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டர் கொலைச் சம்பவம் தொடர்பில் மொத்தம் 23 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று தெரிவித்தார்.

பொரளை பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் இணைந்து

19

## காங்கேசன்துறை - காரைக்கால் இடையே வர்த்தக சேவையில் வத்தைகளே ஈடுபடும்!

யாழ்ப்பாணம், டிசெ. 18

காரைக்கால்- காங்கேசன்துறை கப் பல் சேவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்குமென யாழ்.வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

வத்தைகள் என அழைக்கப்படும் சிறிய கப்பல்கள்தான் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் நடத் திய செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தைப்பொங்கலின் பின்னர் பெப்ரவரி ஆரம்பத்துக்குள் காரைக்கால்- காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கிறோம். இரண்டு நிறுவனங்கள் இதை ஆரம்

19

## அமைச்சரவை, ஆளுநர் நியமனங்கள் உயர்மட்ட முரண்பாடுகளால் தாமதம்

கொழும்பு, டிசெ. 18

உயர்மட்ட முரண்பாடுகளால் அமைச்சரவை மற்றும் ஆளுநர் நியமனங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசாங்கத்தின் உயர்மட்ட அரசியல் முரண்பாடுகள் காரணமாக அமைச்சரவைக்கு புதிய அமைச்சர்கள் நியமனம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன்

19

## வடமாகாண கல்வித் திணைக்களத்தில் நிதி மோசடியில் ஈடுபட்டார் அலுவலர்!

யாழ்ப்பாணம், டிசெ. 18

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் சுமார் 2 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தைச் சுருட்டி யமை தெரிய வந்துள்ளது.

மாகாண கல்வித் திணைக் களத்தில் பணியாற்றம் குறித்த உத்தியோகத்தர் ஆசிரியர்களுக் கான சில கொடுப்பனவுகளை வங்கிகளில் வைப்புச் செய்யும் உத்தியோகத்தராக செயற்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் அவ்வாறு கொடுப்பனவுகளை வைப்பிலிடும் போது உறுதிச் சீட்டுகளில் மாற்றத்தை ஏற்படுத்திப் பணத்தை கையகப்

19

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவர் டிசெம்பர் இரண்டாயிரத்து இருபத்தியோராம் ஆண்டு பதினெட்டாம் திகதி பிறந்திருந்தால் அவருக்கு இந்த ஆண்டு டிசெம்பர் பதினெட்டாம் திகதி அதாவது இன்று முதலாவது பிறந்தநாள். அவருக்கு ஒருவயது முடிந்து இரண்டாவது வயது தொடங்குகின்றது. இப்படித்தான் நாம் அறிந்திருக்கின்றோம்.

ஆனால், நமது இலங்கை தமிழரசுக் கட்சி நாமறிந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு டிசெம்பர் மாதம் பதினெட்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இந்த ஊர்க்குருவி பிறந்தும் இருக்க வில்லை. ஆனால், அப்படித்தான் தமிழரசின் வரலாறு எழுதப்பட்டிருக்கின்றது.

ஆனால், நேற்று முன்தினம் உதயன் பத்திரிகையின் ஆண்டுநிறைவு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்த விழாவுக்கு வந்திருந்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதி ராசா அண்ணர், கிளிநொச்சியில் தமிழரசின் எழுபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவை நடத்தவிருக்கின்றோம் என்று தெரிவித்தபோது, அட மனுசன் தனது கட்சியின் எழுபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவை நடத்துவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னரே திட்டமிட்டு வேலைசெய்கின்றாரே என்று எண்ணிக்கொண்டேன்.

அவர் எழுபத்தி ஐந்தாவது ஆண்டில்தான் அடுத்த பொதுச் சபையைக் கூட்டுவதற்காக காத்திருக்கிறார் போலும் என்றும் அப்போது எண்ணத் தோன்றியது. கட்சியில் அவரின் தலைமைக்கு எதிராக அண்மைக்கால மாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் அதேவேளையில், விரைவில் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரை நியமித்து கட்சிக்கு புதிய இரத்தம் பாய்ச்சாது விட்டால் கட்சிக்கு என்ன ஆகுமோ என்ற எண்ணம் பலருக்கும் இருக்கின்றது.

கட்சியின் தலைமைப் பதவிக்கு ஏற்கனவே இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிவைத்திருக்கின்ற விடயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையில் பேசப்படுவது பற்றியும் முன்னர் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழரசுக் கட்சிக்கு அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் பதினெட்டாம் திகதி எழுபத்து நான்காவது பிறந்தநாள். அதாவது எழுபத்திநான்கு வயது முடிந்து எழுபத்திஐந்தாவது வயது தொடங்குகின்றது.

மாவை அண்ணர், எழுபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு தயாராகிவருகின்றோம் என்று சொன்னபோது அடுத்த ஆண்டு டிசெம்பரில் தான் அவர் ஆண்டுவிழாவோடு பொதுச் சபையையும் கூட்டி புதிய தலைவரை தெரிவுசெய்ய முடிவெடுத்தவிட்டாரோ என்று அப்போது எண்ணுவதைத் தவிர வேறு தெரியவில்லை.

ஆனால், இன்று பதினெட்டாம் திகதி கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சியின் எழுபத்தி ஐந்தாவது ஆண்டு தொடக்கவிழா நடக்கவிருப்பது பற்றியும் அதற்கான அழைப்பிதழ் ஒன்றும் நேற்று முன்தினம் வட்ஸ்அப்பில் வந்தபோது அட, இதைத்தான் மாவையர் சொல்லியிருக்கிறார் என்பது புரிந்தது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை தொடங்கினார். மலையகத் தமிழர்களின் குடியுரிமையை இல்லாமல் செய்யும் இலங்கை குடியுரிமைச் சட்டத்தை தமிழ் காங்கிரஸ் ஆதரித்ததைத் தொடந்தே தந்தை செல்வா காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழரசை தொடங்கினார். ஒருவேளை, அவர் காங்கிரஸிலிருந்து பிரிவதற்கு காரணமான குடியுரிமை சட்டம் கொண்டுவரப்பட்ட நாற்பத்தி எட்டாம் ஆண்டே தமிழரசு பிறந்துவிட்டது என்று கருதினார்களோ தெரியவில்லை. அப்படிக் கருதியிருந்தாலும் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட நவம்பர் மாதம் வரையாவது பொறுத்திருக்க வேண்டாமா?

எழுபத்திஐந்தாவது ஆண்டு விழாவை கொண்டாட ஏன் இந்த அவசரத்தை காட்டுகிறார்கள் என்று ஊடக நண்பர் ஒருவரிடம் கேட்டேன், அவர் சொன்னார் - சில வேளை இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டில் அதன் தலைவரை மாற்றுவது பொருத்தமாக இருக்காது என்று 'சென்ரிமென்ற்றாக' தலைமைப் பதவியில் மாவை தொடர்வாரோ என்வோ என்று.

ஒருவரின் பிறந்த நாளை முன்கூட்டியே கொண்டாடுவது அபசகுணம் என்ற நம்பிக்கை ஒன்று நம் மத்தியில் உண்டு.!

- ஊர்க்குருவி.

# இலங்கை சகல நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படவேண்டும்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 18

ஒரு தீவு என்ற வகையில் இலங்கை, சர்வதேச உறவுகளைப் பேணும்போது அனைத்து நாடுகளுடனும் நட்புறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படுவதன் மூலம் சர்வதேச உலகில் இலங்கையை நல்ல நிலைக்கு உயர்த்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முற்பகல் தியத்தலாவை இராணுவ கல்வியியற் கல்லூரியின் 97 ஆவது பயிற்சியை முடித்து வெளியேறும் கடேற் உத்தியோகத்தர்களின் பிரியாவிடை மரியாதை அணிவகுப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த 351 கடேற் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த நான்கு கடேட் உத்தியோகத்தர்களும் இங்கு பயிற்சி பெற்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்த முப்படைகளின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவேற்கப்பட்டார்.

முதலில் அவ்வளாகத்தில் உள்ள இராணுவ வீரர் நினைவிடத்திற்குச் சென்ற ஜனாதிபதி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய நாள் உங்களுக்கு மிக முக்கியமானது. இன்று நீங்கள் தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்துள்ளீர்கள். ஆனால் இது உங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய தொடக்கமாகும். இன்று முதல் நீங்கள் அனைவரும் இராணுவத்தின் நிரந்தர உறுப்பினர்களாக பணியாற்றத் தொடங்குவீர்கள்.

இலங்கை இராணுவத்தின் தலைவர்கள் என்ற வகையில் உங்களுக்கும் இன்று முதல் பொறுப்பு உள்ளது. அதன்படி, இராணுவத்தையும் அதன் வீரர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. மக்களின் அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனத்தின் மரியாதையையும் அதன் நற்பெயரையும் எப்போதும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் - என்றார். (அ)

# ஜனநாயக போராளிகள் கட்சியின் தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில்!



யாழ்ப்பாணம், டிசெ. 18

ஜனநாயக போராளிகள் கட்சியின் தேசிய மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண உறுப்பினர் கஜதீபன், பிரதேசபை தவிசாளர்கள், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# போதைப்பொருள், படுகொலைகள் குற்றங்களுக்கு கடும் நடவடிக்கை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு



விசாரணைத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் நெவில் டி சில்வா மற்றும் அமைச்சின் இணைப்பு பொலிஸ் அத்தியட்சகர் சுமித் குணரட்ன உள்ளிட்ட துறைசார்ந்த முக்கிய அதிகாரிகளும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

கொழும்பு, டிசெ. 18

படுகொலைகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் உயரதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு, மேற்படி அதிகாரிகளை அழைத்து முக்கியமான கலந்துரையாடலை நடத்திய தன் பின்னர் அவர் இந்த பணிப்புரையை விடுத்தார்.

ஜனசக்தி குறூப் நிறுவனத்தின் தலைவர் தினேஷ் ஷாப்டரின் கடுமையான சித்திரவதை மற்றும் படுகொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் படுகொலைகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் மேற்கொள்ளப் பட்டுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

பொலிஸ் மாஅதிபர் சி.டி. விக்கிரமரட்ன மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் விசேட செயலணியின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மாஅதிபர் வருண ஜயசுந்தர, விசேட பணியகத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் தனபால, குற்றத்தடுப்பு

# விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் 38 பேர் நாட்டை விட்டு வெளியேறினர்

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் உள்ள 38 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக அண்மையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

வேறு நாடுகளில் உள்ள சிவில் ஏவியேஷன் நிறுவனங்கள் வழங்கும் அதிக சம்பளம் மற்றும் வசதிகள் காரணமாக அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலைமை காரணமாக இலங்கையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இது இன்று நாட்டின் அனைத்து துறைகளிலும் காணப்படும் பொதுவான பிரச்னை என்றார்.

25 புதிய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பணியமர்த்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த காலங்களில் பல விமானிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன. (அ)

# கிழக்கை தனித்துக் கையாள்வதற்கு ஜனாதிபதி முதல் சகலரும் முயற்சி

## அதற்கு இடமளிக்கமுடியாது என்கிறார் சுமந்திரன்

அம்பாறை, டிசெ. 18

"தமிழர்கள் கிழக்கில் தனித்து பெரும்பான்மை நிலை நாட்ட முடியாது என்பதால்த்தான் ஜனாதிபதி உட்பட பல அரசியல்வாதிகள் கிழக்கினை தனித்து ஒதுக்கி நடக்க முயற்சிக்கின்றனர் அதற்கு இடமளிக்க முடியாது."

-இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு முதலில் திருக்கோவிலுக்கு விஜயம் செய்தபோது இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்தில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையில் திருக்கோவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-



அம்பாறையும் திருகோணமலையும் ஆபத்தான நிலையில் உள்ளது. வடக்கு-கிழக்கில் மிகமுக்கியமாக எங்களது கரிசனை கிழக்கினை நோக்கி இருக்க வேண்டும்.

அரசியலைப்பு மாற்றங்கள் செய்ய கட்சிக்குள் உள்வாங்கப்பட்ட நான் அம்பாறையை கவனிக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

யுத்தம் முடிவுற்று நடந்த 2010 தேர்தலில் தேசியப் பட்டியல் ஊடாக முதன் முதலில் பாராளு மன்றம் வந்த நான் அரசியலைப்பு திருத்தம், தீர்வுத் திட்டம், சட்டம் தொடர்பில் கையாளும்படி கூறினார்கள். ஆனாலும் அக் காலத்தில் அம்பாறையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பியசேன கட்சி மாறியமை தொடர்ந்து அம்பாறையையும் பார்க்கும்படி கட்சிப் பணியை ஆரம்பித்தேன்.

ஆகவே அன்றிலிருந்து இன்றுவரை எனது பயணம் அம்பாறைக்கான பணியாக இருக்கிறது-என்றார்.

கூட்டத்தில் திருக்கோவில் தொகுதி கட்சி அமைப்பாளர் அ.கலாநேசன் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச்செயலாளர் அருள்.நிதான்சன் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (அ)

# பாலின சமத்துவ பற்றிய சட்டமூல வரைவு நிறைவு

கொழும்பு, டிசெ. 18

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவது தொடர்பான சட்டமூலத்தின் முதலாம் வரைவு நிறைவடைந்துள்ளது என்று பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து ஆராய்ந்து பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் தெரிய வந்தது.

விசேட குழு அதன் தலைவர் பாரளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயம் தொடர்பில் தெரியவந்தது.

பெண்களுக்கான தேசிய ஆணைக்குழு ஒன்றை நிறுவுவது பெண் உரிமை தொடர்பில் ஒம்புட்ஸ்மன் ஒருவரை நியமித்தல் உள்ளிட்ட பொறிமுறை ஒன்றை நிறுவுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அந்த உரிமைகளை மீறும் போது ஆணைக்குழுவினால் எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள், பாலின நிபுணர்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் பெண் உரிமை அமைப்புகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு விசேட குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதற்கமைய, இந்த சட்ட மூலம் தொடர்பான கருத்துக்களை பெற்றுக் கொள்ள மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் என்பவற்றின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வெளியிடுவதற்கும் பத்திரிகை விளம்பரம் வெளியிடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிர மரத்ன, ரோஹிணி குமாரி விஜேரத்ன, (கலாநிதி) ஹரிணி அமரசூரிய மற்றும் இந்த விசேட குழுவின் செயலாளரும் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

# வரவு-செலவுத்திட்ட காலத்தில் இருபது கோடி ரூபாய் செலவு

கொழும்பு, டிசெ. 18

வரவு-செலவுத் திட்ட விவாதங்களின் போது நாடாளுமன்றக் கூட்டங்களுக்காக கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள், விருந்தினர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு உணவு மற்றும் பானங்கள், எரிபொருள், மின்சாரம், நீர், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்காக இவை செலவிடப்பட்டுள்ளது.

பட்ஜெட் விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள் 20 ஆகும். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கான வாக்கெடுப்பு நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகி, 22ஆம் திகதி வரை ஏழு நாட்கள் நடைபெற்றது. பட்ஜெட் குழு விவாதம் நவம்பர் 23ம் திகதி தொடங்கி கடந்த 8ம் திகதி வரை 13 நாட்கள் விவாதம் நடந்தது.

இதேவேளை, கடந்த 13ஆம் திகதி கேள்விகளுக்குப் பதிலளிக்கும் கூட்டம் இடம்பெற்ற போது கேள்விகளைக் கேட்ட எம்.பி.க்கள் பலரும், கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய அமைச்சர்கள் பலரும் அன்றைய தினம் சபைக்கு சமூகமளிக்கவில்லை.

அந்தச் சந்திப்பிற்காக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பரீட்சை கடமைக் கொடுப்பனவுகளை 60 வீதத்தால் அதிகரிக்க முன்மொழிவு

கொழும்பு, டிசெ. 18

உயர்தரம், சாதாரண தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பீடுகள் மற்றும் கடமைக் கொடுப்பனவுகளை அறுபது வீதத்தால் அதிகரிப்பதற்கான முன்மொழிவை பரீட்சைகள் திணைக்களம் கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது.

தற்போதைய நெருக்கடியான பொருளாதாரச் சூழலின் அடிப்படையில் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பிரேரணை தற்போது சம்பளம் மற்றும் பணியாளர்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆய்வு செய்ய அமைச்சும் ஆணைக்குழுவும் தனியான குழுக்களை நியமித்துள்ளன.

பரீட்சைக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான கோரிக்கை சில காலங்களுக்கு முன்னர் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்களால் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படாததுடன், கல்வி உதவித்தொகை அதிகரிப்பின்மையால் பரீட்சை மதிப்பீடுகள் மற்றும் கடமைகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கவனம் செலுத்துவதை குறைத்துக் கொள்ளும் போக்கு காணப்படுவதனால் இம்முறை கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் கூறுகிறது.

அதன்படி, அடுத்த ஆண்டு முதல், 60 சதவீதம் இல்லாவிட்டாலும், உதவித் தொகை ஓரளவு உயர்த்தப்படும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(அ)

# தமிழ் மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறது அரசு

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஐ.நா. கூட்டத்தொடரில் தீர்க்கமான முடிவுகளை எட்டாமல், அதனை சமாளிக்கும் வகையிலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவுமே தமிழ்த் தரப்புகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதாக எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு தொடர்ந்தும் பேச்சுவார்த்தையிலே ஈடுபட்டுக் கொண்டிருப்போமானால் நமது இனம் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும் என எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறினார்.

சமகாலநிலவரம் குறித்து வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர தினத்திற்குள் தீர்வு தரப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் தமிழ் தரப்புகள் தற்போதும்



மௌனமாக இருந்தால் நிலைமை மோசமாகிவிடும்.

ஆகவே பொதுசன வாக்கெடுப்பை கோரி அதன் மூலம் தீர்வை அடைய முயற்சிக்க வேண்டும் என்றும் அதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் அவசியம்.

தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை சிங்கள தரப்புக்கு பல தடவைகள் கூறப்பட்டுள்ள போதும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு என்ன பிரச்னை என அரசாங்கம் கோருவது தமிழ் மக்களை முட்டாளாக்கும் செயற்பாடு-என்றார். (அ)

# சுதந்திர தினத்துக்குள் தீர்வு என்பது பொய்!

## கூறுகிறார் அங்கஜன் இராமநாதன்

யாழ்ப்பாணம், டிசெ. 18

சுதந்திர தினத்திற்குள் தீர்வு கிடைப்பது என்பது ஒரு பொய்யான விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அராலி மத்தி-கணவத்தை பகுதியில் நேற்று கிராம மக்களிடையேயான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இத்தனை வருட போராட்டம், இத்தனை வருட பிரச்னையை வெறும் இரண்டு மாதத்திற்குள் முடிப்பது என்பது ஒரு பொய்யான காரியம். ஆனால் அந்த சுதந்திர தினத்திற்குள் வரக்கூடிய இணக்கப்பாடு ஒரு நல்ல தீர்வுத்திட்டத்தை கொண்டுவருவதற்கு வாய்ப்புள்ளது.

அந்த இணக்கப்பாட்டில் மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். அதாவது காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, யாப்பு மாற்றத்தில் தமிழர்களது அபிலாசைகள் குறித்து உள்ளடக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி கூறிய முக்கியமான விடயம், இந்த 35 வருட யுத்தத்தில் நாங்கள் இழந்தவை ஏராளம். பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி உட்பட சகல துறையிலும் நாங்கள் தற்போது கடைசியாக இருக்கின்றோம்.

நல்லிணக்கத்தின் ஊடாக கிடைக்கப்பெறும் இந்த தீர்வு திட்டத்தினுள் பொருளாதார, அபிவிருத்தி இடைவெளியை நிரப்புவதற்கு, ஏனைய மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் இருக்கும் வாய்ப்புகள் எம்மவர்களுக்கும் கிடைப்பதற்குரிய அந்த நிதியையும் இந்த தீர்வு திட்டத்திற்குள் உள்ளடக்கவேண்டும்.

நீண்டகால எமது மக்களின் காணிகளை இராணுவத்திற்கும் கடற்படையினருக்கும் சுவீகரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நில அளவைத் திணைக்களம் செயற்பட்டு வந்தாலும் இது ஒரு அடிமட்டத்தில் நடக்கும் வேலைத்திட்டமாகும்.



ஆனால் ஜனாதிபதி முன்மாதிரியான ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றார். அதாவது, சுதந்திர தினத்திற்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குரிய இணக்கத்தையாவது முதல் ஏற்படுத்துவதற்கு இந்த காணி விடுவிப்பு போன்ற விடயங்களை கையாள்வதாக.

அதாவது இராணுவம், கடற்படை, வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பிடியில் இருக்கின்ற நிலங்களை மீண்டும் மக்களுக்கு கையளிக்க வேண்டும் என்ற விடயத்தில் எமது பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலும் சர்வ கட்சி மாநாட்டிலும் இதை தெரிவித்திருந்தோம்.

அதற்கு ஜனாதிபதி இதற்கான தீர்வினை பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் எடுக்க வேண்டும் என கூறியிருந்தார். அதை நாங்கள் வலியுறுத்தி இருக்கின்றோம். இந்த சர்வ கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இணக்கப்பாடு இருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை விதித்துள்ளது. அதில் எங்களுடைய பொருளாதாரத்தை சீரமைக்க தேவைப்படுகின்ற கொள்கை முடிவுகளை எடுக்கும்படி தான் நிபந்தனை விதித்துள்ளது. ஆனால் தமிழர்களுடை பிரச்னைக்கு சுதந்திர தினத்திற்குள் தீர்வு வழங்க வேண்டும் என்ற அழுத்தம் கொடுப்பதாக எனக்கு தெரியவில்லை-என்றார். (அ)

# வர்த்தகர் தினேஸ் கொலையில் மர்மம்!

கொழும்பு, டிசெ. 18

இலங்கையின் பிரபல வர்த்தகரின் கொலை தொடர்பிலான ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் அவர் முன்னாள் கிரிக்கெட் வர்ணணையாளர் பிரையன் தோமசை சந்திக்க திட்டமிட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

தினேஸ் சாப்டர் இதனை தனது செயலாளருக்கு தெரிவித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாப்டருக்கும் பிரையன் தோமஸூக்கும் இடையிலாக பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்புள்ளதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திட்டமிடப்பட்டு கொலை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கலாம் என கருதுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் தற்போது இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட குற்றச்செயல் இடம்பெற்ற பகுதிக்கு நேற்றுக் காலை சி.ஐ.டியினர் சென்றுள்ளனர்.

தடயங்கள் ஏதாவது கிடைக்கின்றதா என பார்ப்பதற்காக பொரளை பொது மயானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் சிசிரிவியை ஆராயும் நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் சாப்டரின் வாகனம் பார்ம் வீதி ஊடாக மயானத்துக்குள் நுழைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சாப்டரின் கார் விமானப் படையினரின் நினைவுத் தூபிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்ததை பொலிஸார் பார்த்துள்ளனர்.

சாப்டர் பிளவர் வீதியில் உள்ள தனது வீட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று மணியளவில் கூட்டமொன்றிற்காக சென்றுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வர்ணணையாளர் பிரையன் தோமசை சந்திப்பதற்கு செல்வதாக அவர் தனது செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

பிரையன் தோமஸ் சாப்டரிடமிருந்து 1.4 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளார். (அ)

# எச்.ஐ.வி தொற்றாளர்கள் 90 பேர் நவம்பரில் மட்டும் அடையாளம்!

கொழும்பு, டிசெ. 18

நவம்பரில் 90 எச்.ஐ.வி. தொற்று உறுதியான நபர்கள் கண்டறியப்பட்டனர் என்றும் இந்த ஆண்டு மட்டும் மொத்தம் 568 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைக் கருவிகள் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதை எளிதாக்கியுள்ளன என தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

எச்.ஐ.வி சுய பரிசோதனை கருவிகளை நாடு முழுவதும் உள்ள தேசிய பாலியல் நோய் பிரிவுகளில் பெறமுடியும் என்றும் வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ)

# துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு: பெப்ரவரியில் மனுக்கள் பரிசீலனை!

கொழும்பு, டிசெ. 18

ஜனாதிபதி பொதுமன்னிபில் துமிந்த சில்வாவை விடுவித்து கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களை எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் நீதிபதிகளான பிரீதி பத்மன் சூரசேன, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன் ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அனைத்து தரப்பினரதும் பரிசீலனைகளை கருதிக்கொண்டு நீதிமன்றம் பெப்ரவரி 7ஆம் திகதி மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உத்தரவிட்டது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு கடந்த 2021 ஜூன் 24 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த துமிந்த சில்வா விடுவிக்கப்பட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவரோடு பலர் குற்றவாளிகள் என அறிவித்து கொழும்பு உயர் நீதிமன்றம் 2016 செப்ரெம்பர் மாதம் தீர்ப்பளித்தது.

பிரேமச்சந்திரவின் மனைவி சுமனா பிரேமச்சந்திர, அவரது மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கசாலி ஹூசைன் ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (அ)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி1 கட்டாய இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 18

கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் 05 ஆண்டுகள் பணி முடித்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் 2023 ஜனவரி 1 முதல் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி மாவட்ட மற்றும் அமைச்சுக்களின் மேல்முறையீட்டு வாரியங்களில் இடமாற்றம் செய்யப்படாததற்கு சிறப்புக் காரணங்களைக் கொண்ட அலுவலர்களைத் தவிர, 5 வருட சேவையை பூர்த்தி செய்த ஏனைய அனைத்து கிராம உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்வது கட்டாயம் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அடுத்த வருடம் 31 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் வருடாந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்படாத உத்தியோகத்தர்கள் இன்னும் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்தால் அவர்களுக்கு இடமாற்ற உத்தரவு வழங்குமாறும் அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. (அ)

# இரட்டை குடியுரிமையுள்ளோர் பதவிகளை வகிக்க முடியாது

## விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவிப்பு!

கொழும்பு, டிசெ. 18

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, விளையாட்டுச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பல புதிய விதிமுறைகளை வெளியிட்டார்.

அதன்படி, இலங்கையில் உள்ள எந்தவொரு விளையாட்டுக் கழகத்திலும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பதவிகளை வகிக்க முடியாத வகையில் விளையாட்டுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், விளையாட்டுக் கழகங்களின் எந்தவொரு அதிகாரி அல்லது குழு உறுப்பினரின் அதிகபட்ச வயதை 70 ஆக மாற்றவும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
18.12.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் பலமென்ன?

ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதார நெருக்கடியின் மூலம் ஜனாதிபதியானவர். பொருளாதார நெருக்கடியொன்று ஏற்படாவிட்டால், அவர் ஒருபோதுமே ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. ஏனெனில் அவர் ஒரு தோல்வியுற்ற அரசியல்வாதியாக நோக்கப்பட்டவர். ஆனால், தந்திரம் மிக்கவர். விடுதலைப் புலிகளின் மதியுரைஞராக இருந்த அன்ரன் பாலசிங்கம் கூட, ரணிலை நரியென்றும், அவரை விடவும் மகிந்த பரவாயில்லையென்றும் ஒரு முறை கூறியிருந்தார். ரணிலின் அரசியலாற்றலும், விடயங்களை தந்திரமாக கையாளுவதில் அவரது திறமையையுமே அவரைக் கண்டு பலரும் அஞ்சுவதற்கு காரணம். சிரித்துக்கொண்டே காரியங்களை செய்துமுடித்துவிடும் வல்லமையுள்ளவர். பொருளாதார நெருக்கடியால் கதிரையை கைப்பற்றியிருக்கும் அவர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஆதரவுடன் கதிரையை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடப்போவது தெளிவாகவே தெரிகின்றது.

ரணிலை விட்டால் அடுத்து யாரென்னும் கேள்வியை அரசியல்வாதிகள் தொடக்கம், சாதாரண சிங்கள மக்கள்வரையில் ஏற்படுத்துவதில், அவர் வெற்றி பெற்றிருக்கின்றார். இந்த ராஜபக்ஷ குடும்பத்தை பொறுத்தவரையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அவர்களால் நினைத்துப்பார்க்கக் கூட முடியாது. இந்த நிலையில் ரணிலை ஆதரிப்பதே அவர்களுக்கு முன்னுள்ள தெரிவாக இருக்கின்றது. இதன் காரணமாகவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைப்பது தொடர்பில் பொதுஜன பெரமுனவிற்கு பிரச்னையில்லை என்றவாறான கருத்துக்கள் முகம் காட்டுகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பதற்காக சர்வ கட்சிகளை கூட்டியிருந்தார். இந்த சர்வகட்சிக்கான அழைப்பு முற்றிலும் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட விருப்பிலிருந்தே முன்னெடுக்கப்பட்டது. தென்னிலங்கை சிங்கள கட்சிகள் அவ்வாறானதொரு அழைப்பை விடுக்குமாறு ரணிலை கோரவில்லை. தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட, அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்திருக்கவில்லை.

ரணில், ஆரம்பத்தில் வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன், பேசவுள்ளதாகவே அறிவித்திருந்தார். பின்னர் சடுதியாக தனது நிலைப்பாட்டை மாற்றினார். இந்த இடைப்பட்ட நாட்களில் இந்திய தரப்பிலிருந்து முக்கிய சந்திப்பொன்றும் ரணில் விக்கிரசிங்கவோடு இடம் பெற்றிருந்தது. இதன் போது, என்ன விடயங்கள் பேசப்பட்டதென்பது வெளியில் கசியவில்லை. இதன் பின்னர்தான் தேசிய இனப்பிரச்னையை தீர்க்கவுள்ளதாகவும் - அடுத்த வருட சுதந்திர தினத்திற்கு முன்னர் அதனை தீர்க்கவுள்ளதாகவும் சடுதியாக அறிவித்தார். இது சாத்தியமற்ற விடயமென்பது விவாதிக்கவேண்டியதில்லை. ஆனால் சில விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்க ரணில் உண்மையிலேயே விரும்பினால் அது இயலாத காரியமென்றும் கூறிவிட முடியாது. அதாவது, அரசியலமைப்பிலிருக்கின்ற சில விடயங்களை அமுல்படுத்த முயன்றால், அதில் ஒரு சில அடிகளையெடுத்து வைக்க முடியும்.

ரணில் பலமற்றவர் - எனவே அவரால் என்ன செய்துவிட முடியுமென்று சிலர் வாதிடுகின்றனர். பாராளுமன்றத்தை பொறுத்தவரையில் அவர் பலவீனமானதொரு ஜனாதிபதிதான். ஆனால், ரணிலை விட்டால் வேறு வழியில்லையென்னும் நிலையில்தான் பொதுஜன பெரமுனவினர் இருக்கின்றனர். இதுதான் ரணிலின் பலம். ஒரு வேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக இருந்தால் கூட, அவரால் இந்தளவு பலமானவராக இருக்க முடியாது. ஏனெனில் தன்னைவிட்டால் வேறு வழியில்லையென்னும் நிலைமையை தனது திறமையால் ஏற்படுத்தியிருக்கின்றார். இன்றைய நிலையில் ரணிலை அகற்றிவிட்டு, நாட்டை பொறுப்பெடுக்கின்றோமென்று கூறுவதற்கு துணிவுள்ளவர்கள் எவருமில்லை. ஆரம்பத்தில் ரணிலின் வரவு தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தவர்கள் அனைவரும் காலப்போக்கில் அமைதியடைந்ததும் இந்த பின்புலத்தில்தான். இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் விக்கிரமசிங்க சில பிரச்னைகளை தீர்க்க வேண்டுமென்று, உண்மையிலேயே விரும்பினால், அதற்கான பிள்ளையார் சுழியை இடமுடியும்.

# தமிழ்,முஸ்லிம் மக்களின் தீர்க்கப்படாத பிரச்னைக்குத் தீர்வு காண நடவடிக்கை

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

*கொழும்பு, டிசெ. 18*

தமிழ், முஸ்லிம் மக்களின் தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியில், 'பெரும்பாலும் பொருளாதார நெருக்கடிகள் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். இங்குள்ள சிறுபான்மை சமூகங்களில் இருந்து உங்களுக்கு எவ்வாறான ஆதரவு கிடைக்கிறது? எதிர்காலத்திலும் இதேபோன்ற ஆதரவை அனுபவிப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா?' என வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன,

"இலங்கையும் இந்தியாவும் உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாடுகளாக உள்ளன.

இங்கு மக்கள் அரசுகளைத் தேர்ந்தெடுப்பதுடன், பதவி நீக்கவும் செய்துள்ளனர்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு அப்படியே உள்ளது.

மேலும், ஒவ்வொரு அரசும் அனைத்து குடிமக்களுக்கும், அவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு, அத்துடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி போன்றவற்றில் சாத்தியமான அனைத்து வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது. இலங்கை அரசமைப்பின்முன், அனைவரும் சமம். தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் எவரும் சவால் விடலாம்.

ஆகவே, கடந்த சில மாதங்களில் நிலவிய ஜனநாயக அமைதியின்மைக்குப் பதிலளிப்பதில் இப்போது அதிக நம்பிக்கை உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் யாராக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மக்கள் மத்தியில் எங்கள் நம்பிக்கையை முழுமையாக மீட்டெடுத்துள்ளோம்.

எங்கள் குடிமக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்த எங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையை எங்களால் மீண்டும் கொண்டு வர முடிந்தது.

அரசின் மீது அளப்பரிய நம்பிக்கை உள்ளதுடன், நாட்டின் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளுடனும், எதிர்க்கட்சிக்குள் இருக்கும் அரசியல் குழுக்களுடனும் நாங்கள் இணைந்து செயற்படுகின்றோம். எவருக்கும் பாரபட்சம் கிடையாது.

வடக்கு மக்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ என அனைவரும் முன்வைத்த வேறு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்" - என்றார். (அ)

# வீதியில் விலங்கு கழிவுகள்!



*யாழ்ப்பாணம்,டிசெ.18*

சங்குவேலியில் வீதியில் குப்பைகளும் விலங்குகளின் கழிவுகளும் கொட்டப்பட்டுள்ளதால் அவ் வீதியால் பயணம் செய்பவர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சண்டிலிப்பாயில் இருந்து உடுவிலுக்கு செல்லும் பிரதான வீதியாக இந்த வீதியே காணப்படுகிறது.

இந்த வீதியில் இதற்கு முன்னரும் இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதாகவும் இது குறித்து குறித்த வட்டாரத்திற்கு பொறுப்பான பிரதேச சபையின் உறுப்பினர் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்திற்கு அருகில் விவசாய நிலங்களும் காணப்படுவதால் இவ்வாறான, சூழலுக்கு ஒவ்வாத செயற்பாடு விவசாய நிலங்களையும் பாதிக்கும் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-3)



# பஸ்களில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்


*வவுனியா,டிசெ.18*

பாதுகாப்பான பயணத்திற்கு பாலியல் தொந்தரவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பெண்கள் அபிவிருத்தி குழுவின் மற்றும் வவுனியா மாவட்ட செயலகத் இணைந்து நடத்திய விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டும் செயற்பாடு நேற்றுமுன்தினம் வவுனியா பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், உதவி அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி, பொலிஸார் உட்பட பலரும் கலந்துகொண்டு பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டியிருந்தனர். (அ-5)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ஒரு குடும்பப் பகிர்வு

**கணபதி சர்வானந்தா** — பகிர்வு -60

குடும்பம் ஒரு கோயில் என்பர். ஒரு சமூகத்தின் உயிர் நாடியே குடும்பங்கள் தான் என்று சொல்லப்படுவதில் இருந்து சமூகத்தில் குடும்பங்களின் முக்கியம் என்னவென்று புரிந்திருக்கும். அந்தக் குடும்ப இயக்கம் நடைபெறுவதற்கு சமையல் கட்டு இடைவிடாது இயங்க வேண்டும் என்று சொல்கின்றனர். ஒரு காலத்தில் அமெரிக்காவில் வீடுகளில் சமைப்பதை நிறுத்தி விட்டனர். அதனால் அங்கே என்ன நடந்தது?

சமையலை நிறுத்திவிட்டால், பெரியவர், குழந்தை பராமரிப்புப் பணிகளையும் அரசிடம் கொடுத்துவிட்டால் குடும்பங்கள் அழிந்துபோகும் என புகழ் பெற்ற அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் 1980 களில் தீர்க்கதரிசனமாகக் கூறினார்கள்.

வீடுகளில் சமைப்பதை நிறுத்தி விட்டுக் கடைகளில் வாங்கிக் கொள்ளும் பழக்கம் வந்தது. அதனால் அமெ ரிக்கப் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்தபடியே அமெரிக்கக் குடும்பங்களில் ஏறக்குறைய பொறுப்பும் பிணைப்பும் அழிந்துவிட்டன. பாங்கற்ற குடும்பங்களாக அமெரிக்கக் குடும்பங்கள் மாறிப்போயின.

அன்புடன் சமைப்பது என்பது பாசத்துடன் குடும்பத்தைப் பிணைப்பது என்று சொல்லப்படுகிறது.சமையல் கலை உணவுக்காக மட்டும் அல்ல. அதனைக் குடும்ப கலாச்சாரத்தின் மையப்புள்ளி என்றும் குறிப்பிடுகிறார்கள். சமையல் அறை இல்லாது, வெறும் படுக்கை அறை மட்டும் இருந்தால் அதனை வீடு என்று சொல்ல முடியாது. ஒரு வகையில் அதனைத் தங்குவிடுதி என்று தான் சொல்லலாம்.

சமையல் அறை தேவை இல்லை. அதனை மூடிவிட லாம், படுக்கை அறை மட்டுமே போதும் என்று நினைத்த அமெரிக்கக் குடும்பங்களின் நிலை என்ன?.

1971-ல் மொத்த குடும்பங்களில் கணவனும்-மனை வியும் குழந்தைகளுடன் இருந்த அமெரிக்க குடும்பங்கள் 71 சதவிகிதம், 2020--ல் 20 சதவிகிதமாக நலிந்து விட்டன. அன்று வாழ்ந்த குடும்பங்கள் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் வீடுகள் இன்று தங்கு விடுதிகளாகிவிட்டன. அமெரிக்காவில் இப்போது பெண்கள் தனித்திருக்கும் வீடுகள் 15 சதவிகிதம் ஆண்கள் தனித்திருக்கும் வீடுகள் 12 சதவிகிதம் 19 சதவிகிதம் வீடுகள் அப்பாவோ, அம்மாவோ மட்டுமே இருக்கும் வீடுகள். 6 சதவிகித வீடுகள் குடும்பப் பிணைப்பில்லாத ஆண்-பெண் சேர்ந்து தங்குமிடங்களாகிப்போயின. இன்று பிறக்கும் மொத்த குழந்தைகளில் 41 சதவிகிதம் திருமணமாகாத பெண்க ளுக்கு பிறக்கின்றன. அதில் பாதிக் குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் சிறுமிகளுக்குப் பிறப்பதாகச் சொல்லப்படுகிறது.

குடும்பம் என்ற ஒன்றின் இல்லாமை கலாசாரச் சீரழிவுக்கே வித்திட்டது. இந்த அலங்கோலத்தால் அமெரிக்காவில் 50 சதவிகிதம் முதல் திருமணங்கள் விவாகரத்திலே முடிகின்றன. 67 சதவிகிதம் இரண்டாவது திருமணங்களும், 74 சதவிகிதம் மூன்றாவது திருமணங்களும் விவகாரத்தாகின்றன. வெறும் படுக்கை அறை மட்டும் குடும்பம் அல்ல என்ற தெளிவு யாரிடமுமில்லை. சமையல் அறை இல்லாது, படுக்கை அறை மட்டும் இருந்தால் திருமணம் நிலைகுலைந்துவிடும் என்பதற்கு அமெரிக்காவை ஒரு உதாரணமாகச் சொல்லலாம்.

அங்குபோல இங்கும் குடும்பங்கள் அழிந்தால் மனநலமும் உடல் நலமும் சீரழியும். வெளியில் சாப்பிடுவதால் உடல் ஊதிப்போகும். ஏராள மான தொற்று வியாதிகள் வந்துவிடும். சேமிப்பும் குறைந்துவிடும். எனவே சமையல், சமையல் அறை என்ற விடயங்கள் குடும்ப நலனுக்கு மட்டும் ஆதாரம் அல்ல, உடல் நலம், மன நலம், பொருளாதார நலம் என்ற அத்தனைக்கும் அவசியம் என்று சொல்லலாம்.

மேலும் சமையல் செய்வதில் ஆன்மீக இரகசியங்கள் பல உள்ளடங்கியிருக்கின்றன. சமையல் செய்பவரின் குணநலன்கள், பழக்கவழக்கங்கள் அவர் சமைக்கின்ற உணவிலும் வரும் என்பது ஒரு ஆன்மீக உண்மை மட்டுமல்ல நம்பிக்கையும் கூட.

ஆதலால்தான் எமது முன்னோர் உணவு விற்பனை நிலையங்களில் சாப்பிடுவதை தவிர்த்தும், கண்டித்தும் வந்தனர் ஆனால் இன்று நம்மிடையே குடும்பத்துடன் கடைகளில் சாப்பிடுவதையும்... ஒன்லைனில் ஓடர் செய்து சாப்பிடுவதையும் நாகரீகமாகிக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு பேராபத்து...?

நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை அந்த ஒன்லைன் நிறுவனங்களே தீர்மானிக்கிறார்கள். இது உளவியல் ரீதியாக உணரப்பட்ட உண்மை. இப்படிப்பட்ட நிறுவனங்களுக்குள் தற்போது சீன முதலீடுகள் அதிகம் வந்துவிட்டன. சீனர்கள் எப்பொழுதும் வியாபாரத்தை இலாபகரமானதாக இருக்க வேண்டும் என்று மட்டுமே சிந்திப்பர். அதில் மனித ஆரோக்கியம் என்ற விடயம் இரண்டாவதாகத்தானிருக்கும். முன்பெல்லாம் நம்முன்னோர்கள் யாத்திரை மற்றும் சுற்றுலா செல்லும் போதுகூட உணவைச் சமைத்துக் கட்டி எடுத்துக் கொண்டு செல்வார்கள். உணவை நீண்டகாலத்துக்குக் கெடாது பாதுகாக்கும் இயற்கைத் தொழில் நுட்ப முறைகளை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

நம் தர்மத்தில் வாழ்க்கை முறையில் பெண்களை, குறிப்பாக மனைவியை, “போஜ்யேஷுமாதா” என்று சொல்லுவர். அதாவது உணவூட்டுவதில் தாய் வல்லவர் என்று சம்ஸ்க்ருத சுபாஷிதம் குறிப்பிடுகிறது.ஆகையால் வீட்டிலேயே சமையல் செய்யுங்கள். அனைவரும் சேர்ந்து உணவருந்துங்கள்.காலையில் எறும்புக்கும் பகலில் காகத்துக்கும் இரவில் நாய்க்கும் உணவிடுங்கள். அவை நன்மைதரும்.

குடும்பங்களாக வாழ்வதின் முக்கியத்துவம் நன்கு அறியப்பட்டிருக்கிறது. குடும்பங்களின் ஒருங்கிணைப்பே சமூகத்தை உருவாக்குகிறது. நல்ல சமூகம் என்று சொல்லுகின்றபோது நல்ல குடும்பங்களின் இணைவு என்றே மறைமுகமாகக் குறிப்பிடுகிறோம். குடும்பங்கள் எல்லாவற்றையும் இறை தங்கும் கோயில்களாக மாற்றுவோம். பயன் பெறுவோம்.

# இந்தவார ராசிபலன் 18.12.2022 - 24.12.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00** | **ராகு காலம் : 04.30 - 06.00** | **திதி : தசமி**

**டிசெம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - மார்கழி 03**

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

முயற்சி லாபமாகும். வருமானத்திற்குரிய செயல்கள் வெற்றி பெறும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். அரசுவழி முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும். தொழில் சுமாராக செல்லும். திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். செலவிற்கேற்ற வருமானம் ஏற்படும். விழிப்புணர்வு அவசியம். எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் அதிகரிக்கும். சொத்து சேர்க்கை உண்டாகும். அமைதி காப்பது நலம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

மகிழ்ச்சி அதிகரிக்கும்.குடும்பத்தினரால் சில சங்கடம் தோன்றும். சொத்துகள் வாங்கும் முயற்சி பலிதமாகும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.செயல்கள் இழுபறியாகும். நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாகும். ஒரு சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பணியிடத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். எதிர்பார்த்தவற்றில் நன்மையான பலன்கள் உண்டாகும்.தைரியமாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். எதிர்ப்புகள் விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நன்மைகள் அதிகரிக்கும்.செயல்களில் நெருக்கடி உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தினர் தேவையை நிறைவேற்றுவீர்கள்.வராமல் இருந்த பணம் வசூலாகும். வரவுகள் அதிகரிக்கும்.முயற்சிக்கேற்ப லாபம் உண்டாகும் வாரம் இது. குடும்ப நலனில் கவனம் செல்லும். அந்நியர்கள் வழியே ஆதாயம் அதிகரிக்கும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். அரசுவழி முயற்சி ஆதாயமாகும். புதிய சொத்து வாங்குவீர்கள். தொழிலில் வருமானம் அதிகரிக்கும். நிதிநிலை உயரும். நிதானம் தேவை. நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நெருக்கடி உண்டாகும். செயல்களில் இருந்த தடைகள் விலகும். செல்வாக்கு உயரும். சிலருக்கு புதிய வேலை அமையும். எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

செயல்களில் கூடுதல் முயற்சி தேவை. அதன்பின் உங்கள் செல்வாக்கு கூடும். நிதிநிலை உயரும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். குடும்ப வழியில் செலவுகள் அதிகரிக்கும். சிலர் புதிய வாகனம் வாங்குவர். செல்வாக்கு உயரும். நீண்ட நாளாக மனதை வாட்டிய பிரச்னை விலகும். எண்ணங்கள் நிறைவேறும். அரசு பணியாளர்கள் பாராட்டப்படுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

அலைச்சல், செலவு உண்டாகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். திடீர் பணவரவால் சங்கடம் விலகும். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.சிந்தித்து செயல்பட நன்மை அதிகரிக்கும். முயற்சி பலிதமாகும். வருமானம் அதிகரிக்கும். பொருள் சேர்க்கை உண்டாகும். திருமண வயதினருக்கு வரன் வரும். புதிய சொத்து வாங்கும் முயற்சியை சிலர் மேற்கொள்வீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சியில் தடைகள், செலவுகள் ஏற்படும். உங்கள் எண்ணம் நிறைவேறும். தொழில் சம்பந்தப்பட்ட முயற்சி ஆதாயமாகும். எதிர்பார்த்த வருவாய் வரும்.வருமானம் அதிகரிக்கும். வராமல் இருந்த பணம் வசூலாகும் என்றாலும் வாரத்தின் முற்பகுதியில் செலவு அதிகரிக்கும். அதன்பின் நிலைமை சீராகும். எதிர்பாராத செலவுகளை சந்திக்க நேரும். அரசு வழியில் ஆதாயம் உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. நினைத்தவற்றை சாதித்து முடிப்பீர்கள். செல்வாக்கு உயரும். நிதிநிலை சீராகும். புதிய முயற்சி பலிதமாகும். செலவும் அலைச்சலும் அதிகரிக்கும்.யோகமான வாரம் இது. முயற்சியில் இருந்த தடை விலகும். உறவினர் ஆதரவு அதிகரிக்கும். தொழிலை விருத்தி செய்து லாபம் காண்பீர்கள். வருமானம் பல வழியில் வர ஆரம்பிக்கும். சொத்து சேர்க்கை ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

செயல்கள் எளிதாக நடந்தேறும். எதிர்பார்ப்பு நிறைவேறும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். வரவு செலவில் கவனம் தேவை. பணம் பல வழியில் வர ஆரம்பிக்கும். நெருக்கடி நிலை விலகி நன்மை காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். வேலை வாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். குடும்ப பிரச்னை தீரும். எதிர்பாராத செலவு ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மனதில் குழப்பம் அதிகரிக்கும். அதன்பின் உங்கள் முயற்சிக்கேற்ப நன்மை ஏற்படும். தொழிலில் இருந்த தடை விலகும்.கடந்த வார சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். முயற்சிகள் ஒவ்வொன்றாய் நிறைவேறும். தொழிலில் உண்டான தடை விலகும். வருமானம் அதிகரிக்கும்.பழைய பிரச்னைகள் தலைதூக்கும். நெருக்கடி அதிகரிக்கும். நிலைமை சீராகும். தேவைக்கேற்ப வருமானம் உண்டாகும்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நிதானம் அவசியம். தெளிவு உண்டாகும். பிரச்னைகளை சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நெருக்கடி, சங்கடம் தோன்றும். அரசு வழியிலான முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும்.முயற்சி இழுபறியாகும். எதிர்பாராத நெருக்கடியை சந்திப்பீர்கள் அதன்பின் நிலை சீராகும். சொத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். பிள்ளைகள் வழியே சில சங்கடங்கள் உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

விருப்பம் நிறைவேறும். முயற்சிகள் வெற்றியாகும்.சில சங்கடங்களை சந்திப்பீர்கள். ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்னை விலகும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்த செயல்கள் ஆதாயமாகும். பூர்வீக சொத்து விவகாரம் முடிவிற்கு வரும். ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம். செயல்களில் சங்கடம் உண்டாகும். ஆதாயம் தோன்றும்.

# தமிழர்களுடனான நல்லிணக்கம் காலத்தின் கட்டாயம்



சென்னை மடல்
-பகவான் சிங்-

கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப்பற்றி வந்த செய்திகளையும் சுவாரஸ்யமான கருத்துக்களையும் கண்டிருப்பீர்கள். அடுத்தநாள், பிரதான செய்தியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் காட்டமான விமர்சனத்தையும் படித்திருப்பீர்கள். மீண்டும் இதையெல்லாம் இங்கு விரிவாகக் குறிப்பிடுவது உங்கள் நேரத்தை வீணாக்குவதாகும். எனது ஓரிரண்டு கருத்துகளை மட்டும் பதிவுசெய்ய அனுமதி தாருங்கள். நாட்டு மக்களிடமிருந்து ஒட்டுமொத்த ஆதரவு இல்லையென்றாலும், பொருளாதாரச் சிக்கலுக்குத் தீர்வு காணும் தனது கட்டாய முயற்சியாக, அரசியல் ஆதரவைப் பெற ஜனாதிபதி எடுக்கும் முன்முயற்சிகள் குறித்து முதலில் பார்ப்போம். அரசியல் ஸ்திரத்தன்மையின்மை மற்றும் தமிழர் உட்பட, சிறுபான்மையினர் ஒடுக்குமுறை ஆகிய விஷயங்களில் நடவடிக்கை எடுக்க, உலக வங்கி, ஐநா அமைப்புகள் உள்ளிட்ட சர்வதேச நிதியமைப்புகளின் கடும் அழுத்தத்துக்கு ரணில் உட்பட்டிருப்பதை நாம் அறிவோம். அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், கடும் கடன்கள் என்னும்

படுகுழியிலிருந்து மீண்டெழ எடுக்கப்படும் எந்த முயற்சியும் வெற்றிபெற இது ஒன்றே உத்தரவாதமளிக்கும். உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாகவுள்ள உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ள, ஒரு முதிர்ந்த அரசியல் தலைவராகவும் அனுபவமிக்க நிர்வாகியாகவும் ரணிலுக்கு அதிக காலமோ, அடுத்தவர் வந்து விளக்கவேண்டிய அவசியமோ தேவைப்படாது.

தமிழர்கள் உள்ளிட்ட பிற சிறுபான்மையினருடன் நல்லிணக்கத்தை எட்டக்கூடிய அரசியல் தீர்வைக் காணக் காலம் கனிந்திருப்பதையும் ஜனாதிபதி அறிவார். போரில் வென்ற பெருமையில் திளைத்திருந்த மஹிந்த ராஜபக்ஷவைவிட இதை அடைய இவருக்குச் சிறந்த வாய்ப்பு தற்போது அமைந்துள்ளது. தமிழர்களிடம் மஹிந்த சற்று பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள முடிவு செய்திருந்தால், அதை எதிர்த்திருக்கக்கூடிய பௌத்த மத குருமார்கள் உள்ளிட்ட சிங்களப் பருந்துகள்கூட, கோவிட் பெருந்தொற்றால் வாழ்வாதார இழப்பு, உணவுக்கும் எரிபொருளுக்கும் நின்ற நீண்ட வரிசைகள் போன்ற, பொருளாதார முடக்கத்தின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு

அமைதியாக இருக்கும் சமயம் இது. சிங்களவர்களின் பழைய மனநிலையில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம், தமிழர்களுக்கு நீதி வழங்க ரணிலுக்கு உதவியாக இருக்க வேண்டும். ஆனால், அவர் செய்வாரா என்பதுதான் கேள்வி. சிங்களவர் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்று, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருந்தபோது மஹிந்த, போரால் பாதிக்கப்பட்டிருந்த தமிழர்களுக்கு எந்த ஆதரவையும் வழங்காமல், இனவாதபோக்குடன் நடந்துகொண்டார். வரலாறு அமைத்துக் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நல்லாட்சி வழங்க அவர்

தவறிவிட்டார். ரணில், தனது பாராளுமன்ற முதலாளியின் பாதையைப் பின்பற்றி இனவாதப் போக்கைக் கடைபிடிப்பாரா என்ற கேள்வி எழுகிறது. மாட்டார் என்று நம்புகிறேன். தமிழர்களுடனான நல்லிணக்கம், காலத்தின் கட்டாயம் என்ற நிலையிலிருந்து விலக, சர்வதேச நிதியமைப்புகளும் ஐநா அமைப்புகளும் ரணிலை அனுமதிக்காது. குறிப்பாக, சீனாவிடம் இழந்த, இலங்கையில் தனது பிடியை மீட்க புத்துணர்ச்சியுடன் புறப்பட்டிருக்கும் இந்தியா இதை விரும்பாது. பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றைப் பிரதிநிதியாகத் தத்தளித்துக் கொண்டிருக்கும் ரணிலுக்கு, தனது கட்சிக்கு வெளியில் ஒரு பெரும்பான்மையைப் பெற இது பொன்னான தருணம் என்று புரிந்திருக்கும். இதன் மூலம், நிதியுதவி அளிப்பவர்களின் நம்பிக்கையைப் பெற்று, பொருளாதார மீட்சிக்கு இட்டுச்செல்லக்கூடிய அரிய வாய்ப்பு அமையும். இதை அவர் செய்வாரா? இத்தனை வருடங்களாக அரசியலில் இருந்து, நாட்டை ஆண்டது வீணில்லை என்று தனக்குத்தானே நிரூபித்துக்கொள்ளவாவது அவர் இதைச் செய்யவேண்டும். ஆனால், அவரால் முடியுமா? வானளாவிய அதிகாரம் பெற்ற ராஜபக்ஷ குடும்பத்திடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிப்பறிக்க அனுமதிக்கப்படுவாரா? ரணில் உறுதியாக இருந்தால், இது சாத்தியமே. அதற்கு அடிப்படையாக மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன. மக்களைப் பாதித்துள்ள இந்தப் பொருளாதார முடக்கத்திற்குப் பல காரணங்கள் இருந்தாலும், முக்கிய காரணம் ராகபக்ஷ குடும்பத்தினரே. சர்வதேச நிதியமைப்புகளும் முதலீட்டாளர்களும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலவுவதையே விரும்புகிறார்கள். மூன்றாவதாக, புவிசார் அரசியல்

வரைபடத்தில் தற்சமயம் ஒரு பக்கம் சீனாவும் மற்றொரு பக்கம் அமெரிக்காவும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், இந்தியா, தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக நிறுவிக்கொள்ள, இலங்கையின் சமூக-அரசியல்-பொருளாதார மீட்சி வலிமை சேர்க்கும்.

இதுவரை இந்தியா, சரியாகவே காய் நகர்த்தி வருகிறது என்று கருதுகிறேன். செவ்வாயன்று ஜனாதிபதி ரணிலின் தலைமையில் நடந்த மாநாட்டில் வெளிப்படையாக ஈடுபடாவிட்டாலும், இந்திய வெளியுறவுத் துறை, தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல், சிங்களத் தலைமை மத்தியிலும் தனக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கான அடிப்படையை அமைத்



## வெற்றிக் கிண்ணத்தை ரணில் வெல்வாரா?

துள்ளது. இது, பொருளாதாரக் கட்டமைப்புக்கான அரசியல் தீர்வை நோக்கி உந்தக்கூடும். சிங்கள அரசியல் கட்சிகள் உட்பட பெரும்பான்மையானவை, அரசியல் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாக 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் போக்கு உருவாகியிருப்பதாக நான் அறிகிறேன். “தொடக்கத்திலிருந்தே 13ஆவது திருத்தத்தை நான் ஆதரித்து வருகிறேன். செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் இப்போதுதான் அதை ஆதரித்துப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்” என்று, செவ்வாய் மாநாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக்

கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். அந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட என் இனிய நண்பர் செல்வம் அடைக்கலநாதனுடன் நான் பேசினேன். மாகாண சபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் ஆகிய கோரிக்கைகளுக்குப் பல சிங்களப் பங்கேற்பாளர்களும் ஆதரவு தெரிவித்ததாக அவர் கூறினார். காணாமல்போனவர்கள் பற்றியும் அனைவரும் ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் தெரிவித்தனர்.

தமிழ்த் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கு முன், சில முன் நிபந்தனைகளுக்கு ரணில் உட்பட வேண்டும் என்று விதிக்கத் தவறியதால், அவர்கள் தமிழ்

## கஜேந்திரகுமாரின் அரசியல் நிர்ப்பந்தம்!

மக்களை ஏமாற்றிவிட்டதாக கஜேந்திரகுமார் வைத்த விமரிசனத்தைப்பற்றி செல்வத்திடம் கேட்டேன். “இந்தக் குறைகூறல் மிகவும் எளிதானது. இதுதான் நம்மிடையே நெடுங்காலமாக நடந்துவருகிறது. கூட்டத்துக்குச் செல்லும் முன் என்னென்ன கோரிக்கைகளைப் பட்டியலிடவேண்டும் என்பது குறித்து கஜன் பேசவில்லை” என்று பதிலளித்த செல்வம், நீண்ட காலமாகத் துன்பத்தில் உழலும் தமிழர்களுக்காக ஒருங்கிணைந்து கை கோர்த்துப் போராடவேண்டிய காலத்தில்கூட, தனிப்பட்ட நலன்களைக் கருத்தில் கொண்டு, அற்பமான முன்முடிவுகளால் தமிழ்த் தலைவர்கள் பிரிந்துகிடப்பது குறித்த வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் தொடர்ந்த செல்வம், “அரசு தரப்பிலிருந்து ஒரு தீர்வை எட்டப் பேச்சுவார்த்தை முயற்சி மேற்கொள்ளப்படும்போது அதை நாம் தொடர்ந்து புறக்கணித்து வந்தால், வீண் பிடிவாதமாக இருப்பதாக வெளியுலகம் நம்மைத்தான் குறைகூறும். நமது மக்களை இருளிலிருந்து புதிய உதயத்துக்கு இட்டுச் செல்லும் எண்ணம் இல்லாத தலைவர்களாகவே பிற நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் நம்மைப் பார்க்கும். நாம் வெற்றி பெறும் வரை முயற்சிகளைக் கைவிட முடியாது. உலக நாடுகளின் கருத்தும் நமக்கு ஆதரவாகவே இருக்கிறது. இந்த அமைதி முயற்சிகளைச் சில நாடுகள் வெளிப்படையாகவே ஆதரிக்கின்றன” என்றார்.

பேச்சுவார்த்தைகளின் இந்தக் கட்டத்தில், இந்தியாவை ஈடுபடுத்தினால், சில சிங்கள அமைப்புகள் எரிச்சலடையக் கூடுமாகையால், அரசியல் தீர்வு எட்டப் படுவதில் குழப்பம் ஏற்படலாம் என்பதால், தற்போது இந்தியாவை ஈடுபடுத்தாமல் இருப்பது நல்லது என்ற தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர் சம்பந்தரின் கருத்தைத் தானும் ஆதரிப்பதாகவே செல்வம் கூறினார்.

நவம்பர் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் ரணில் கூறியது உங்களுக்கு நினைவிருக்கலாம். “நமது உள்நாட்டு விவகாரங்களில் இன்னொரு நாடு தலையிடுவது தேவையற்றது. நமது பிரச்னைகளை நாமே தீர்த்துக்கொள்ள முடியும். அதைத்தான் நாம் செய்ய முயன்று கொண்டிருக்கிறோம்” என்று, எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடாமல் கூறியிருந்தார். “நமது சுதந்தரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவுக்கு முன், நம் முன் இருக்கும் அனைத்துப் பிரச்னைகளையும் விவாதித்துத் தீர்வு காண அடுத்த வாரம் நான் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.” என்றார். 2023 பெப்ரவரி 4 அன்று இலங்கை தனது 75ஆவது சுதந்தர தினத்தைக் கொண்டாடவுள்ளது. “நாங்கள் நான்கு நிபந்தனைகளை முன்வைத்து, ஜனவரி 31க்குள் இவற்றுக்குத் தீர்வு காணுமாறு அதிபரிடம் கோரியிருக்கிறோம். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி தவறினால், எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பது குறித்து, எங்கள் நிலைப்பாட்டைப் பரிசீலிக்க வேண்டியிருக்கும்.” என்றார் செல்வம். அந்த நான்கு நிபந்தனைகள் என்னென்ன என்பதை என் அன்பான ‘ஈழநாடு’ வாசகர்கள் அறிவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். தமிழர் பகுதிகளில் நிலம் கையகப்படுத்தும் அரசின் திட்டத்தை நிறுத்தி, கையகப்படுத்தப்பட்ட நிலங்களை உரிமையாளர்களிடம் திருப்பி ஒப்படைப்பது - பொறுப்பை ஏற்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது உட்பட, காணாமல் போனவர்கள் பிரச்னை குறித்து விரிவாக முழுவதுமாகக் கவனம் செலுத்துவது - பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறவேண்டிய தேவையில்லாத, தொடர்புடைய இரண்டு சட்டங்களில் திருத்தம் கொண்டு வந்து, மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்குவது - மற்றும், இடையறாத நடைமுறையை உறுதிசெய்ய, அரசியல் தீர்வில் இந்தியாவை ஈடுபடுத்துவது.

ஜனாதிபதியின் மாநாட்டில் பங்கேற்ற தமிழ்ப் பிரதிநிதிகளை கஜேந்திரகுமார் தாக்கிப் பேசியதைக் குறிப்பிட்டிருந்தேன். பாலசிங்கம் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பேசப்பட்ட சுவாரஸ்யமான பேச்சு அது. மற்ற தமிழ்த் தலைவர்களைத் திறமையற்றவர்கள் என்றும் சுயநலவாதிகள் என்றும் குற்றம் கூறியதுடன், பிரபாகரனும் அவரது புலிப்படையும் இருந்திருந்தால், தமிழர்களுக்கு இப்படியொரு அவல நிலை ஏற்பட்டிருக்காது என்றும்கூட அவர் குறிப்பிட்டார். இது சுவாரஸ்யமாக இல்லையா? பிரபாகரனால் ‘துரோகிகள்’ என்று முத்திரையிடப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்ட பிற ஈழக் குழுக்களின் தலைவர்கள், தொண்டர்கள் குறித்தும் இந்தியா, நோர்வே - ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் போன்ற அயல்நாட்டுத் தலையீட்டால் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்திருக்கக் கூடிய பொன்னான வாய்ப்புகளை பிரபாகரனால் இழந்தது குறித்தும் மதிப்பிட்டு முடிவு செய்யும் பணியை என் ‘ஈழநாடு’ வாசகர்களிடமும், அந்த அனல் பறக்கும் உரையைக் கேட்ட மற்றவர்களிடமுமே விட்டுவிடுகிறேன்.

அமைதி முயற்சிகளை முறியடித்தது புலிகள் தலைவரின் முழுப் பொறுப்பு என்று நான் கூறவில்லை. அதில் சிங்களவர்களின் பங்கும் பலமுறை இருந்துள்ளது. மதிநுட்பம் வாய்ந்த உத்தியாளர் அன்ரன் பாலசிங்கம், பேச்சு வார்த்தைகளில் வல்லவரான, விசுவாசி தமிழ்ச் செல்வன் போன்றோர் உடனிருந்தும், பிரபாகரன் அமைதி முயற்சிகளில் முழுமூச்சாக ஈடுபடவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை. போர் நிறுத்தத்தை யும் அமைதி முயற்சிகளையும் பலமுறை அவர் முறியடித்துள்ளார். ஆனால், பெரும் புலியின் பேரில், பிற தமிழ்த் தலைவர்களைக் குறைகூறுவதும் கஜேந்திர குமாரின் அரசியல் கட்டாயமாக இருக்கலாம். உங்களிடமிருந்து விடை பெறும் நேரம் வந்து விட்டது. ஆனால், செல்வதற்கு முன், மீண்டும் ஒருமுறை உங்களை, பேச்சுவார்த்தைத் திறன்களைப் பல மடங்கு அதிகரிக்க, ஒருங்கிணைந்த தமிழ் அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சிக்குமாறு வேண்டுகிறேன்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# இன்று தமிழரசு கட்சிக்கு வயது 73

## இப்போது - நாங்கள் பொறுமை காக்கவேண்டும்

**18.12.1949ல் தொடங்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் 14வது தேசிய மாநாடு மட்டக்களப்பில் 27.05.2012 அன்று நடைபெற்றது. மாநாட்டில் அப்போது அதன் தலைவராக இருந்த இரா. சம்பந்தன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே பிரசுரிக்கின்றோம்.**

தமிழர்களுக்கு இந்தத் தீவில் நியாயமான அரசியற் பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதையும், அந்தப் பிரச்சனைகள் புதுப்புது வடிவங்களில் பரிணமித்து வருகின்றன என்பதையும் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. போரின் கடைசிக் காலத்தில் மிகப் பாரிய மனித அழிவுகள் இங்கே நிகழ்த்தப்பட்டன என்பதையும் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. போரை நிகழ்த்துவதற்கு சிறீலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியிலும் இராஜதந்திர ரீதியிலும் உறுதுணையாய் இருந்த இந்த சர்வதேச சமூகம், போர் நிகழ்ந்த போது சிறீலங்கா அரசாங்கத்தால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அதன் மீது இப்போது இறுக்கமான அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகள் என்பவை போர் முடிவடைந்த பின்பு தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்பதாகும். இப்போது போர் முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டநிலையிலும், தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் விசனம் கொண்டுள்ள அனைத்துலக சமூகம் இராஜதந்திரக் களத்தில் இறங்கி அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி யுள்ளது.

**இந்த நேரத்தில் நாம் பொறுமை காக்கவேண்டும்.**

தமிழ் தேசிய இனப் பிரச்சினையில் உலக சமூகத்தினர் அதீத ஈடுபாடு கொண்டுள்ள இந்த நேரத்தில், அவர்களோடு நாம் சேர்ந்து இயங்க வேண்டும். அவர்களது ஆலோசனைகளை நாம் பெற்றும், அவர்களுக்கு எமது ஆலோசனைகளை வழங்கியும் ஒத்திசைவாக இயங்க வேண்டும். இந்த வேளையில் அவர்களைச் சர்ச்சைகளுக்குள் சிக்க வைக்கும் விதமாகவோ, அல்லது சங்கடத்திற்கு உள்ளாக்கும் விதமாகவோ நாம் செயற்படுவோமேயானால், அது எமது இனத்தைத்தான் பாதிக்கும். இப்போது எமது மூலோபாயம் என்னவெனில் இவ்வளவு வருடங்களும், தமிழ் தேசிய இனப்பிரச்சினையை, ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என விவரித்து வந்த சிறீலங்கா அரசாங்கத்தின் உண்மை முகத்தை வெளிப்படுத்துவது ஆகும். அதாவது, தமிழருக்கு உரிமைகள் வழங்குவதை இழுத் தடித்த சிறீலங்கா அரசாங்கத்தின் உண்மையான பிரச்சினை தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கு அது இதயசுத்தியுடன் இல்லை என்பதை, உலக சமூகத்தின் முன் நாம் தெளிவாக நிரூபிக்க வேண்டும் இன்னொரு வகையில் சொல்லுவதானால், ‘ஒன்றுபட்ட இலங்கை” என்ற அமைப்புக்குள் எமக்கான உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் உலக சமூகத்திற்கு நிரூபிக்க வேண்டும். இன்னொரு வகையில் சொல்லுவதானால் தாம் எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி பெறமுடியாது என்பதை இந்த அனைத்துலக சமூகம் தானாகவே உணரும்வரை நாம் பொறுமை காக்க வேண்டும். இன்னும் அழுத்தமாகச் சொல்லுவதானால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள் தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க பேரினவாத ஆட்சியாளர்கள் ஒருபோதும் முன்வரமாட்டார்கள் என்பதை நாங்களே சொல்லாமல், அனைத்துலக சமூகம் அதுவாகவே தன் அனுபவங்கள் வாயிலாக உணர இடமளிக்க வேண்டும்.



**அதுவரை, நாம் பொறுமை காக்கவேண்டும்.**

இந்தப் பூலோகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் நியாயத் தராசில் வைத்து நிறுக்கப்படுவதுமில்லை. ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகளைப் பற் றியும் பறைசாற்றுகின்ற உலகப் பெரும் சக்திகள் எல்லோரும் நீதி தேவர்களும் அல்லர். அனைத்துலக வல்லரசுகளும் அவற்றைச் சார்ந்து இயங்கும் சக்திமிக்க உலக நிறுவனங்களும் ஏதோ தமது நலன் களை எல்லாம் பணயம் வைத்துவிட்டு எமக்காக இரங்கி வந்து, எமது உரிமைக ளைப் பெற்றுத் தரப் போகின்றன என் றும் நாங்கள் நம்பவில்லை. இருந்த போதும் அண்மைக் காலங்களில் மோசமான மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகம் வெறுமனே கைகட்டி மௌன மாகப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதும், நாங்கள் யதார்த்தத்தில் தொடர்ந்து அவதானித்துவரும் உண்மை தான். அதனால், தமது தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து அவர்கள் நிகழ்த்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக, அவர்களது மனிதாபிமான உள்ளுணர்விற்கும் தேச நலன் சார்ந்த முனைப்பிற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில், எமது நலன்களும் பாதுகாக்கப்படலாம். அதற்கு உகந்த சூழலை நாம் தான் பேண வேண்டும். கனிந்துவரும் சூழலைக் குழப்பாமல், அனைத்துலக சமூகத்தை அசௌகரியப் படுத்தாமல், நிலைமையை நாங்கள் பக்குவமாகக் கையாள வேண்டும்.

**அதற்காக - நாம் பொறுமை காக்க வேண்டும்.**

எண்பதுகளின் நடுப்பகுதியில் இந்தியத் தலையீடு நிகழ்ந்த போது இருந்த உலகச் செல்நெறி இப்போது மாறிவிட்டது. இப்போது - ஆடுகளம் பழையதானாலும், அதைச் சூழ நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள் புதியவை. ஆட்டம் பழையதானாலும், அதன் தந்திரோபாயங்கள் இலக்குகள் பழையவைதான் என்றாலும், அவற்றை அடைவதற்கான மூலோபாயங்கள் புதியவை. ஆட்டக்காரர்கள் பழையவர்கள் தான் எனினும், அவர்கள் சேர்ந்திருக்கும் அணிகள் புதியவை. தமிழர்களுக்கும் அப்படித்தான் - இலட்சியம் பழையதே ஆனாலும், இனி நாங்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் முற்றிலும் புதியவை. முன்பொரு காலம், அமெரிக்கா, இந்தியாவிற்கு எதிரான பக்கத்தில் இருந்தது. ஆனால். இன்று எமக்குச் சாதகமாகக் கனிந்து வந்துள்ள சூழலில் இந்தியாவும் அமெரிக்காவும் ஏறக்குறைய ஒரே பக்கத்தில் இருக்கின்றன. ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ, இவர்களுக்கு மாறான பக்கத்தில் இருப்பவர்களுடன் நட்புறவைத் தொடர்ந்தும் வளர்த்துச் செல்கின்றது. சிறீலங்கா அரசாங்கத்தை வளைத்து வியூகமிட்டு, ஐ. நா. மனித உரிமைகள் மன்றத்தில் அண்மையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களித்தமை. எமக்குச் சாதகமாக அரங்கேறிய ஓர் அற்புதமான உலக நிகழ்வு. அதனை, எதிர்கால அரங்கேற்றங்களுக்கான ஓர் எதிர்வுகூரல் என்றே கருத வேண்டும்.

**எனது பெருமதிப்பிற்குரியோர்களே!**

ஆளணிகள், அம்பு வில்லுகளுடன் சாதிக்க முடியாது போன ஒப்பற்ற உயரிய காரியங்களைக் கூட உயிரழிவு ஏதுமின்றிச் சாதிக்கும் மகத்தான வாய்ப்பை இந்தப் புதிய ஆட்ட ஒழுங்கு எமக்குப் பெற்றுத் தரலாம்.

**அதனால் தான் -நாம் பொறுமை காக்கவேண்டும்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பாகிய எமக்கு இருக்கின்ற பலம் என்பது. நாம் ஜனநாயக் ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பது தான். தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, நேர்மையான முறையில், சட்ட பூர்வமாக நிகழ்ந்த தேர்தல்களின் மூலம் எமது மக்கள் எம்மைத் தேர்ந்து எடுத்தனர். நாங்கள் மக்களின் மலையான ஆதரவைப் பெற்ற மாபெரும் அரசியல் அமைப்பு. அதனால்தான், எமது அரசியற் செயற்பாடுகளை மதித்து, அனைத்துலக சமூகமும் எமக்குரிய அங்கீகாரத்தைத் தருகின்றது. ஆனால். நாம் கடும்போக்குவாதிகள் என்றோ, நெகிழ்வுத் தன்மை அற்றவர்கள் என்றோ, மீண்டும் வன்முறைக்குத் தூபமிடும் விதமான மறைமுக எண்ணங்களைக் கொண்டவர்கள் என்றோ உலகம் கருதுமிடத்து நாமும் இன்றைய இராஜதந்திர முன்னெடுப்புக்களில் இருந்து ஓரங்கட்டப்படலாம். அதனால், நாங்கள் எமது சொற்களிலும் செயல்களிலும் மிகுந்த நுட்பத்தைப் பேண வேண்டும். மிகுந்த அவதானத்துடன் காய்களை நகர்த்த வேண்டும்.

> “எமது பொறுமை கால வரையறை அற்றதாக நீண்டு செல்லப் போவதில்லை. எமது பொறுமைக்கும் எல்லைகள் உண்டு. பொறுமையின் அந்த எல்லையை நாம் தொட்டதன் பின்னரான அடுத்த கட்டத் திட்டங்களை நாம் கொண்டுள்ளோம்.”

**ஆதலால் நாம் பொறுமை காக்கவேண்டும்.**

முப்பது ஆண்டு கால மிக தீண்ட போர் எமது சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்தியை முற்றாக முடக்கிவிட்டது என்பது உண்மைதான். அவ்வாறு முடக்கியது மட்டுமின்றி, எமது சமூகத்தின் பொருளாதாரத்தை பல தசாப்தங்களுக்குப் பின்தள்ளிவிட்டது என்பதும் உண்மைதான். அவ்வாறு பின்தள்ளியது மட்டுமன்றி, தாட்சண்யமின்றி நிகழ்த்தப்பட்ட போரின் நேரடியான தாக்கம், எமது சமூகத்தை, அன்றாட வாழ்வுக்கே அல்லற்படும்படியான அதல பாதாளத்தில் வீழ்த்திவிட்டது என்பதும் உண்மை தான்.

எங்களை, எமது சமூகத்தை, ஒட்டுமொத்தமான எமது இனத் தையே இந்த அதல பாதாளத்திலி ருந்து மீட்டு எடுத்து, உலகத் தரம் வாய்ந்த ஒரு வாழ்வின் சிகரத்திற்கு இட்டுச்செல்ல வேண்டிய பெரும் கடமை, எங்கள் எல்லோரிடமும் உள் ளது என்பதுவும் உண்மைதான். ஆனால், அதற்காக அன்பர்களே, சிறீலங்கா அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தி என்ற மாயப் பொறிக்குள் நாங்கள் சிக்கிவிடலாகாது. ஏனெனில், அது ஒட்டுமொத்தமான எமது இனத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் ஒரு சூழ்ச்சிப் பொறி ஒரு மரணப் பொறி.

எமது மக்களின் புனர்வாழ்வுப் பணிகளில் எமது ஈடுபாட்டை சிறீலங்கா அரசாங்கம் விரும்பவில்லை. எமது மக்களின் மீள் கட்டுமானத் திட்டங்களில் பங்கேற்க நாம் முன்வைத்த யோசனைகளை சிறீலங்கா அரசாங்கம் பரிசீலிக்கவில்லை. எந்த மக்களின் பிரதிநிதிகளாக நாம் உள்ளோமோ, அந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களில் எமது பங்களிப்பையும் வழங்குவதற்கு எமக்கு இருக்கும் உரிமையை, சிறீலங்கா அரசாங்கம் நிராகரித்தது. ஏனெனில் - தமிழர் தாயகத்தின் குடிப்பரம்பல் கட்டமைப்பை மாற்றியமைத்து, தமிழினத்தினது தேசிய இயல்பின் அடிப் படையையே தகர்த்துவிடும் சதி நோக்கத்தையே, அபிவிருத்தி என்ற போர்வையில் இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்த முனைகின்றது. எனவே தான். அவல வாழ்விலிருந்து எமது மக்களை மீட்டு எடுத்துவிட வேண்டும் என்ற அவாவிலும் அவசரத்திலும் இந்த மாயப் பொறிக்குள் வீழ்ந்துவிடாமல் நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும். நிதானமாக நகர வேண்டும்.

ஆனால் எமக்கான கடமைகளை நாம் செய்வதற்கு ஏற்ற சூழல் கனிந்து வருகின்றது. அனைத்துலக சமூகத்தின் ஈடுபாடு. அரசாங்கம் மீது கொண்டுவரும் அழுத்தம், எமது மக்களுக்கான பணிகளில் எம்மையும் கலந்தினைக்கும் நிர்ப்பந்தத்தை சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்படுத்தும். தவிர்க்க முடியாத கட்டாயமாக, எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் எமது ஒத்துழைப்பைத் தேடி வரும் சூழல் சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்படும்.

**ஆனால் - அதுவரை, நாம் பொறுமை காக்கவேண்டும்.**

இருந்தாலும், எமது பொறுமை கால வரையறை அற்றதாக நீண்டு செல்லப் போவதில்லை. எமது பொறுமைக்கும் எல்லைகள் உண்டு. பொறுமையின் அந்த எல்லையை நாம் தொட்டதன் பின்னரான அடுத்த கட்டத் திட்டங்களை நாம் கொண்டுள்ளோம். இலங்கைத் தீவில் வாழும் எமது மக்களை ஒருங்கு திரட்டி, இந்த நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகளின் ஒத்துழைப்புடனும், சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவுடனும் திடமான ஒரு சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுக்கவும் நாம் தயங்க மாட்டோம். காலம் குறித்து. நேர வரையறைகள் நிர்ணயித்து, நாம் அந்தத் திட்டத்தைச் செயலாக்கத் தொடங்குவோம்.

ஆனால், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக ஓர் அரசியற் தீர்வைப் பெறுவதில் நாம் உளப்பூர்வமாகச் செயற்பட்ட வண்ணம், எமது இனச் சிக்கலோடு தொடர்புபட்ட எல்லாச் சக்திகளுக் கும், எமது பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத்தருவதற்கு. நாம் போதிய அவகாசம் வழங்கவேண்டும் எனவே, அதற்கு இட மளிக்கும் வகையிலும் நாம் பொறுமை காக்கவேண்டும். பொறுமை காப்பது கூட - மிகச் சக்தி மிக்க ஓர் இராஜதந்திரச் செயற்பாடுதான்.



# இனநெருக்கடிக்கு தீர்வுகாண

# ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மகாநாடு



**- பி.கே. பாலச்சந்திரன்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை (13/12) ஜனாதிபதி செயலகத்தில் கூட்டிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் இலங்கையின் 75 வது சுதந்திரதினமான 2023 பெப்ரவரி 4 அளவில் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. 2023 பெப்ரவரிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்வைக் காண்பதை நோக்கிய பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் சகல கட்சிகளும் இணங்கிக்கொண்டன.

1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து இலங்கையின் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தத்தில் விதந்துரைக்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் முறைமையை முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு கட்சிகள் இணங்கிக்கொண்டன. அந்த திருத்தத்தை முறையாக நடைமுறைப் படுத்த தவறியதால் மாகாண மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இடையூறுகள் இருந்ததாக தமிழர்கள் இடையறாது முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மாத்திரமல்ல, சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பல மாகாணங்களின் முதலமைச்சர்களும் கூட அவ்வாறு முறையிட்டார்கள். 13 வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலுக்கு இந்த கட்சி மகாநாட்டில் ஏகமனதான அங்கீகாரம் கிடைத்தது.

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தற்போதைய தலைவருமான மகிந்த ராஜபக்ச முன்னர் உறுதியளித்ததன் பிரகாரம் 13 வது திருத்தத்துக்கு (13 + ) அப்பால் செல்வதற்கும் கட்சிகள் இணங்கிக்கொண்டன.13 வது திருத்தம் தொடர்பில் தமிழ்க்கட்சிகள் கடுமையான அதிருப்தி தெரிவித்ததால் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. அந்த திருத்தம் வரையப்பட்டபோது தமிழ்க்கட்சிகளோ சிங்கள கட்சிகளோ சம்பந்தப்படுத்தப்படவில்லை.

மாகாணங்களுக்கு கூடுதல்பட்ச அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கு மகாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகள் இணங்கிக்கொண்டனர். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து சமஷ்டி அடிப்படையிலான அரசியலமைப் பொன்றுக்காக தமிழர்கள் போராடி வருகிறார்கள்.

மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே தொடங்குவதற்கு பதிலாக 2019 ஜனவரியில் பிரதமராக விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசியலமைப்பு தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பரிசீலனைக்கு எடுக்கமுடியும் என்ற யோசனையை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மகாநாட்டில் முன்வைத்தார். இது குறித்தும் அங்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அரசியலமைப்பு தொடர்பான விவ காரங்கள் ஆராயப்படுகின்ற அதே வேளை வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் அரசியல் சாராத பிரச்சினைகளை தீர்த்துவைப்பது குறித்தும் அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என்றும் சுமந்திரன் வலியுறுத்தினார்.

ஆயுதப்படைகளினால் தமிழர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகள் மீளக்கையளிக்கப்படவேண்டும். தனியாருக்கு சொந்தமான 90 சதவீதமான காணிகள் மீளக்கையளிக்கப்பட்ட போதிலும் பொதுப்பயன்பாட்டுக்கான காணிகள் இன்னமும் கையளிக்கப்படவில்லை . போர்க்காலத்தில் கைது செய்யப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாமல் நீண்ட காலமாக சிறையில் இருக்கும் தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் கோரினார்.

அவ்வாறு சிறையில் இருக்கும் 31 பேரில் 16 பேரின் வழக்குகள் இன்னமும் விசாரணையில் இருக்கின்றன. 15 பேர் மீதான விசாரணைகள் பூர்த்தியாக வில்லை என்பதால் அவர்கள் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள் என்று சுமந்திரன் விளக்கினார்.

இந்த விவகாரத்தை கவனிக்குமாறு நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவை ஜனாதிபதி விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார். அரசியல் தலைவர்களை அல்லது பொது மக்களை கொலை செய்ததற்காக பயங்கரவாத குற்றவாளியாக காணப்பட்டவர்களை விடுதலை செய்ய முடியாது. மற்றும்படி மற்றவர் களின் விவகாரத்தை அனுதாபமாக அணுகமுடியும் என்று ராஜபக்ச கூறினார்.

ஆனால், ஒருவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவரை குற்றவாளியாக காண்பதற்கான அடிப்படையாக எடுக்க முடியாது என்பதால் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களின் விவகாரத்தை மீளாய்வுக்கு உட்படுத்தவேண்டும் என்று முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்த



யோசனையை ஜனாதிபதியும் நீதியமைச்சரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்த பல்வேறு செயன்முறைகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ள முடியும். 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது போன்ற ஏற்கெனவே பெருமளவுக்கு இணக்கப்பாட்டைக் கொண்ட எளிதான விவகாரங்களில் நடவடிக்கைகளை முதலில் தொடங்கலாம் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க யோசனை கூறினார்.

ஆனால், சுமந்திரன் இந்த செயன் முறைகளை ஒவ்வொன்றாக அல்ல ஏக காலத்தில் முன்னெடுக்க வேண்டும். ஏனென்றால் (இவற்றை 2023 பெப்ரவரி 4 அளவில் முழுச் செயன்முறையையும் முடிக்கவேண்டும்) காலப்பகுதி குறுகியதாக இருக்கிறது என்று சமந்திரன் வேண்டுகோள் விடுத்தார். ஜனாதிபதி அதற்கு இணங்கிக்கொண்டார்.

மகாநாட்டின் விளைவுகள் குறித்து திருப்தியடைவதாக சுமந்திரன் கூறினார்.

முதலமைச்சர்களின் மகாநாட்டில் சிங்கள பெரும்பான்மை மாகாணங்களின் முதலமைச்சர்கள் 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்ததாக இந்திய வம்சாவளி தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

காலம் குறுகியதாக இருப் பதால் மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே தொடங்குவது முடியாத காரியம். முதலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்தல்களை நடத்தி 13 வது

> "முதலில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி பிறகு கூடுதல்பட்ச அதிகாரப்பர வலாக்கத்துடன் கூடிய புதிய அரசியலமைப்பின் வீச்செல்லைகளை அடுத்த சுதந்திரதினம் அளவில் இறுதியாக்க இணக்கம்"

திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதன் மூலமாக சுயாட்சி அனுபவத்தை அந்த மக்கள் பெற வகைசெய்ய வேண்டும் என்றும் மனோ கணேசன் கூறினார்.

மேலும், இந்திய வம்சாவளி மலையக தமிழ்ச் சமூகத்தினதும் முஸ்லிம் சமூகத்தினதும் தலைவர்களிடமிருந்து யோச னைகளை பெற்றுக்கொள்வ தற்கு உயர்மட்ட குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று கோரி ஜனா திபதிக்கு தான் கடிதம் எழுதியதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசியப்பிரச்சினையுடன் தொடர்புடைய யோசனைகளைப் பெறுவதற்கான குழு வொன்றின் உறுப்பினர்களாக பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள் விஜேதாச ராஜபக்ச, அலி சப்ரி ஆகியோரை நியமித்திருப்பதாக கூறினார். பிறகு ஜனாதிபதி இந்திய வம்சாவளி மலையக தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பான யோசனைகளை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவிடம் கையளிக்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணியிடம் கேட்டுக் கொண்டார்.




(பி.கே. பாலச்சந்திரன் கடந்த 25 வருடங்களாக கொழும்பில் இருந்து இயங்கி வரும் இந்திய பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமாவார்)

# ரணிலின் சுதந்திர தின 'வெற்றி' உரைக்கு தமிழர் தரப்புடனான பேச்சு வழிவகுக்கும்!

**பனங்காட்டான்**

வடக்கு தமிழ் எம்.பிக்களுடன் அந்த மக்களின் பிரச்சனைகள் குறித்து பேச்சு நடைபெறுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் பத்தாம் திகதி நாடாளுமன்றத்தில் ஓர் அறிவிப்பை விடுத்தார்.

தமிழர் பிரச்சனையை அல்லது இனப்பிரச்சனையை வடக்கு மக்களின் அல்லது அந்தப் பிரதேசத்தின் பிரச்சனையாக மாற்றும் குறளிவித்தை அரசியலை தமக்கேயுரிய பாணியில் ரணில் ஆரம்பித்ததை இந்த அறிவிப்பு வெளிப்படுத்தியது.

பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்தும் பலமாக எழுந்த குரல்கள் காரணமாக இறுதியில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளையும் இணைத்த கூட்டமாக இது மாற்றம்பெற்றது. சிங்கள அரசியல் கட்சிகளும், முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் கட்சிகளும் இந்த மாதம் 13ம் திகதி இடம்பெற்ற முதலாவது கூட்டத்தில் பங்குபற்றினர்.

சமவேளையில், மற்றொரு அரசியல் வெடிகுண்டையும் ரணில் விக்கிரமசிங்க தூக்கி வீசினார். பெப்ரவரி 4ம் திகதி இடம்பெறவுள்ள 75வது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணக்கூடியதாக இப்பேச்சுவார்த்தை இடம்பெறுமென்பது இந்த அறிவிப்பு.

கடந்த வாரப் பத்தியில் குறிப்பிட்டது போன்று, 65 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் - உடன்படிக்கைகள் - பங்களிப்புகள் - ஒத்துழைப்புகள் மூலம் தீர்வு காணப்பட முடியாது, பல்லாயிரம் உயிர்களைப் பலியெடுத்த போர்களையும் கண்ட இப்பிரச்சனையை 75 நாட்களுக்குள் ரணிலால் எவ்வாறு தீர்க்க முடியுமென்ற கேள்வி பலர் மனதிலும் உள்ளது.

சின்னச் சின்ன இழுபறிகளுக்குப் பின்னர், திட்டவட்டமாக என்ன முடிவு எடுக்கப்பட்டதென்று எவருமே விபரிக்க முடியாத நிலையில் 13ம் திகதிய கூட்டம் முடிவுபெற்றது. இலங்கையின் சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் இந்தக் கூட்டம் பற்றி உப்புச் சப்பில்லாத வகையில் இதுவரை செய்திகளை வெளியிட்டுள்ளன. ஓர் ஆங்கிலப் பத்திரிகை, வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு என்ற தலைப்பில் ஒரேயொரு முஸ்லிம் எம்.பியின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

ஆனால், தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தளவில் இந்தப் பேச்சுவார்த்தை முன்பக்கத் தலைப்புச் செய்தி (கொட்டை எழுத்துச் செய்தி என்றும் சொல்லலாம்). உதாரணத்துக்கு மூன்று தமிழ்ப் பத்திரிகைகளின் 14ம் திகதிய பதிப்பின் முதற்பக்க செய்திகளின் தலைப்புகள் பின்வருமாறு அமைந்திருந்தன:

1. எழுபத்தைந்தாவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சனைக்குத் தீர்வு.

2. 2023 சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சனைக்குத் தீர்வு.

3. பெப்ரவரி 4க்கு முன்னர் தீர்வின்றேல் நல்லிணக்கம் சாத்தியமில்லை! வெளிப்படையாக அறிவிப்பேன் என்கிறார் ஜனாதிபதி.

ஆனால், இந்தக் கூட்டம் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில், '2023 சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு முன்னர் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண சகல அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து உடன்பாட்டுக்கு வரவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தினூடாக இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த மாநாட்டை ஜனாதிபதி கூட்டினாரென்று மேலும் இந்த ஆவணம் கூறுகிறது.



ஆனால், இந்த மாநாட்டில் உரையாற்றிய ரணில் குதர்க்கமான ஒரு கருத்தை முன்வைத்தார்: 'நாம் தீர்க்க விரும்பும் பிரச்சனை இனப்பிரச்சனையா அல்லது வேறு ஏதாவது பிரச்சனையா என்பது முக்கியமல்ல. பிரச்சனைக்கு நாங்கள் தீர்வுகளை வழங்க விரும்புகிறோம். அதற்கு இணைந்து சகல அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஓர் உடன்பாட்டை எட்டின. அதற்காகவே இந்தக் கூட்டம்" என்பது எடுத்த எடுப்பில் ரணில் முன்வைத்த விடயம்.

தற்போதுள்ள பிரச்சனை இனப்பிரச்சனையா அல்லது வேறு பிரச்சனையா என்ற சந்தேகம் ரணிலிடம் இருப்பது போல் தெரிகிறது. நாடாளுமன்றத்தின் சகல அரசியல் கட்சிகளும் எட்டிய உடன்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கூட்டம் நடைபெறுவதாக அவர் தெரிவித்ததானது மறைபொருளைக் கொண்டது. எதிர்காலத்தில் இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்காது போகுமானால் அதனை மற்றைய கட்சிகளின் தலையில் சுமக்க வைப்பதற்கு முன்னேற்பாடாக இக்கருத்தை அவர் முன்வைத்திருப்பது போலவே தெரிகிறது.

1987ம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13வது திருத்தம், அதன் வழியாக அமைந்த மாகாண சபை முறைமை பற்றி பல தரப்பாலும் இங்கு கருத்துரைக்கப்பட்டது. 13ம் திருத்தத்தை நடைமுறைபடுத்துவதன் மூலமாகவே நல்லிணக்கம் தொடங்கப்பட வேண்டுமென்றும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தாமதமின்றி நடத்தப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

(இத்தேர்தலுக்கு இந்த மாத இறுதியில் வேட்புமனுத் தாக்கல் கோரப்படுமென்று ஒரு செய்தி தெரிவிக்க, ஆறு மாதங்களுக்கு தேர்தல் பின்போடப்படலாமென்று இன்னொரு செய்தி சொல்கிறது).

இராணுவம் தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பது, வழிபாட்டுத்தலங்களை அச்சுறுத்தலின் கீழ் கொண்டு போகிறது என்ற முறைப்பாடுகளுக்கு தீர்க்கமான பதிலை ஜனாதிபதி தெரிவிக்கவில்லை. வழிபாட்டுத் தலங்களுக்கு அச்சுறுத்தல் இருந்தால் தனக்கு தெரிவிக்குமாறு அவர் இங்கு வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்க, வடக்கிலும் கிழக்கிலும் படையினரும் தொல்பொருள் திணைக்களத்தினரும் பொதுமக்கள் காணிகளையும் வழிபாட்டுத்தல நிலங்களையும் அளவிடும் பணியை மக்கள் எதிர்ப்பையும் மீறி மூர்க்கத்தனமாக மேற் கொண்டிருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே தீர்மானித்திருந்த மூன்று அம்சங்களை இங்கு முன்வைத்தது. அபகரிக்கப்பட்ட காணிகளை அரசாங்கம் விடுவிக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், மாகாண சபைக்கான தேர்தல்களை விரைந்து நடத்த வேண்டுமென்பவையே இவை. இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவையென்பதையும் கூட்டமைப்பு இங்கு சுட்டியது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முக்கிய விடயமொன்றை இங்கு மிகத் துணிச்சலாக வெளிப்படுத்தினார். காணாமலாக்கப்பட்டோர் அனைவரையும் கொன்று விட்டீர்கள் என்று தலைமை மேசையில் ரணிலுக்கு அருகிலிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை நோக்கி

> **இனப் பிரச்சனைக்கு தீர்வு காணவென ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தமிழர் தரப்புடனான பேச்சுவார்த்தை ஜெனிவாவை ஒதுக்கிவிட ரணில் வகுத்திருக்கும் திட்டத்தில் முக்கியமானது. அதேசமயம், இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண ஏற்பாடாகி விட்டதாக தமது சுதந்திர தின உரையில் அவர் குறிப்பிடுவதற்கும் இந்தப் பேச்சுவார்த்தை வாய்ப்பளிக்கப் போகிறது.**

சம்பந்தன் கூறியபோது கூட்டத்தில் சிறிது அதிர்ச்சி ஏற்பட்டது. இதற்கு எவரும் பதிலளிக்க முன்வர வில்லை. அதுமட்டுமன்றி, கூட்டம் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்த அறிக்கையிலும் சம்பந்தனின் அறிவிப்பு தவிர்க்கப்பட்டிருந்தது.

பிரச்சனைக்குத் தீர்வுகாண ஏற்பாடான இக்கூட்டத்தில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. மாறாக, சகல கட்சிகளையும் ஒன்றிணைந்து தீர்வைக்காண முன்வருமாறு கூறி, பந்தை லாவகமாக அவர்கள் தரப்புக்கு அடித்துவிட்டார் ரணில். இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட மற்றைய நடவடிக்கைகளுக்கு ஏற்கனவேயுள்ள சட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர்பில் ஜனவரி மாதத்தில் தமிழ் கட்சிகளுடன் பேசுவதாக அறிவித்த ரணில், ஜனவரி 31க்கு முதல் அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டையும் கோரியுள்ளார்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீக மண் என்பதை இக் கூட்டத்தில் வலியுறுத்தினார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்று ரீதியாக தமிழருக்கான சொந்த நிலம், மொழி, கலாசாரம் ஆகியவற்றோடு நாட்டின் மற்றைய நிலப்பரப்புகளி லிருந்து வேறுபட்டது என்பதையும், 1833ம் ஆண்டில் ஆங்கிலேயர் இந்நாட்டை நிர்வாக ரீதியாக ஒன்றிணைத்ததன் பின்னரே தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் தெளிவாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்களுக்கும் முடிவுரை கூறுவது போன்ற பாணியில் கூட்டமைப்பின் சுமந்திரன் தமது கருத்தை கூறினார்: 'இப்போது அரசியலமைப்பை நிறைவேற்ற முடியாது. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றக் கூடியதாக ஜனாதிபதிக்கு சமாந்தரமாக மூன்று வழிகள் இருந்தால் நாங்கள் அதனை செய்வோம்.

தேர்தல் நடத்த ஒப்புக் கொண்டுள்ளோம். அனைத்துச் சட்டங்களையும் செயற்படுத்துவோம். இறுதித் தீர்வுக்கு ஒப்புக் கொண்டுள்ளோம். அப்போதுதான் 75வது சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி எதிர்பார்ப்பது போன்று அமையும்".

ரணில் கூட்டிய சர்வகட்சி மாநாட்டின் பொழிப்பு என்று சொல்லக்கூடியதாக சுமந்திரன் கூறியவை அமைந்துள்ளன. நல்லாட்சிக் காலத்தில் எவ்வாறு ரணிலை காப்பாற்றினாரோ அதுபோன்று இனிமேலும் காப்பாற்றக்கூடியதாக இவரது அறிவிப்பு காணப்படுகிறது.

'தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வை வெளிச்சக்திகளின் பங்கேற்பின்றி, உள்நாட்டில் எமக்குள் நாமே பேசித் தீர்க்க முடிவு கண்டுள்ளோம்" என்று ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தின உரையில் எடுத்துக்கூறுவதற்கு சுமந்திரன் அடியெடுத்துக் கொடுத்துள்ளார்.

ஜெனிவா தீர்மானம் இலங்கையின் கழுத்தை நெரிக்க ஆரம்பித்துள்ளது. சர்வதேச நிதியுதவிகளுக்கு உள்நாட்டு அரசியல் தீர்வு அவசியமாகிறது. போர்க்குற்ற பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச நீதி விசாரணை பொறிமுறையிலிருந்து தப்பவும், அனைத்து உலகத்தை ஏமாற்றவும் ரணில்தரப்புக்கு இந்தப் பேச்சுவார்த்தை அவசியம்.

மறுபுறத்தில். சிங்கள ஆட்சித்தரப்புகள் மீண்டும் தமிழர் தரப்பை பேச்சுவார்த்தை என்று சொல்லி ஏமாற்றிவிட்டன என்று சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட தமிழ் கட்சிகளுக்கும் பேச்சுவார்த்தை தேவைப்படலாம்.

இருதரப்பினரும் இதனை நன்கு புரிந்து கொண்டே பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்றுள்ளனர். ஆனதால் இப்பேச்சுவார்த்தையையிட்டு அதிகம் அலட்டிக் கொள்வதும், எதனையும் எதிர்பார்ப்பதும் உசிதமானதல்ல. இருப்பினும், ரணிலின் இருப்புக்கும் கதிரையின் பாதுகாப்புக்கும் நிச்சயமாக இது உதவும்.

# குளிர் பலியெடுத்த உயிர்கள்...!
# காப்பகமே அவசிய தேவை!!

**எஸ். வசீகரன்,**
கால்நடைகள் திணைக்கள பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.




வடக்கு மாகாணத்தில் கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலையால் 500 க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன. அந்த உயிரிழந்த கால்நடைகள் உரிமையாளர்களுக்கு உரிய நட்டஈட்டை பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கையை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

கால்நடை உரிமையாளர்களுக்கு அந்த நட்டஈட்டை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் உயிரிழந்த கால்நடைகளில் பல கால்நடைகள் பதிவு இல்லாமல் உள்ளன. எனவே உயிரிழந்த கால்நடைகளின் பண்ணையாளர்கள் உயிரிழந்த கால்நடைகளின் பதிவிலக்கம் மற்றும் ஏனைய தரவுகளை உடனடியாக அந்தந்த மாவட்ட கால்நடைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு வழங்குமிடத்து அவர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பது இலகு.

வடக்கு ஆளுநரின் அறிவுறுத்தலில் வழிகாட்டலுக்கமைய எங்களுடைய பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அல்லது திறந்தவெளிகளிலே உள்ள கால்நடைகளை பாதுகாப்பது தொடர்பாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருக்கின்ற கால்நடைகளின் பெருமளவில் 80 வீதமான கால்நடைகள் திறந்த வெளி மூலமாகவே தமது உணவை பெற்றுக் கொள்கின்றன. குறிப்பாக, இங்கேயுள்ள மாடுகள் குறைந்த உற்பத்தி திறன்கொண்ட மாடுகளாகவே உள்ளன.

வடக்கு மாகாணத்தில் 4 இலட்சம் மாடுகளும் கிட்டத்தட்ட 40 ஆயிரம் அளவில் எருமை மாடுகளும் மூன்று இலட்சத்துக்கும் குறைவான ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. இது ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடும்போது தொகையிலேயே மிக அதிகமாகும். ஆனால், இந்த 4 இலட்சம் நாடுகளில் ஏறத்தாழ 3 இலட்சம் மாடுகள் பால் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதில்லை. இவை பெரும்பாலும் திறந்த வெளிகளிலே மேய்ச்சலுக்கு அனுப்பப்பட்டு தாங்கள் விரும்பிய இடங்களில் நீரை குடித்து வளர்ந்து வருகின்ற திறந்த வெளி வளர்ப்பு மாடுகளாக அதேபோல கலப்பின பெருக்கத்துக்கு பெரும்பாலும் உட்படாமல் நாட்டின மாடுகளாகவே உள்ளன. இவற்றின் பால் உற்பத்தி தன்மை மிகக் குறைவாகவோ அல்லது இல்லை என்று சொல்லும் அளவுக்கு காணப்படுகின்றது.

இருந்தாலும் இந்த கால்நடைகளை வளர்க்கின்ற பண்ணையாளர்கள் வருமானத்தை ஈட்டுவதற்கு காரணம் இலங்கையிலே இறைச்சித் தேவையில் 30 வீதத்தை வடக்கு மாகாணம் பூர்த்த செய்வததுதான். 35வீதம் கிழக்கு மாகாணமே பூர்த்தி செய்கிறது. ஆகவே, வருடாந்தம் மிக அதிகளவான கால்நடைகளை இறைச்சிக்காக அனுப்பி எங்களுடைய பண்ணையாளர்கள் மிக அதிகளவான வருமானத்தை பெறுகின்றனர்.

எனினும், இவ்வாறான திறந்த வெளி வளர்ப்பு முறைகளை தொடர்ந்து நம்மால் மேற்கொள்ள முடியுமா என்று கேள்வி ஏற்பட்டுள்ளது. எங்களுடைய தோட்டங்கள், வயல்கள் போன்ற செய்கை பண்ணப்படாத நிலம் அனைத்தும் எதிர்காலத்திலே இருக்குமா அல்லது தற்போது இருப்பதை விவசாயிகளுக்கு பயன்படுத்த வேண்டுமா? விவசாய உற்பத்திகளை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கமைய அவற்றை விவசாய தேவைகளுக்கு படிப்படியாக பயன்படுத்தி வருகின்ற நிலையிலே கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் அல்லது இவற்றுக்கான உணவுகளை பெற்றுக் கொள்வதில் பண்ணையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

அது மட்டுமல்ல நிலங்களில் பயிர் செய்கையில் ஈடுபடும்போது மாடுகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பிரதேசங்களில் முக்கியமாக இந்த மாடுகள் அவை சாதாரண பண்ணையாளர்களின் வீடுகளுக்கு அண்மையில் அடைத்து வைக்கப்படும் மாடுகள், மிகவும் தொலைதூரமான இடங்களிலே பாதுகாப்பு இல்லாத காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய இடங்களில் நல்ல நீர் கிடைக்காத இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படுகின்றன.

ஏனென்றால், அவைகள் வயல்களை நாசமாக்கிவிடும் என்ற காரணத்தால் பண்ணையாளர்கள் அந்த கால்நடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவார்கள். இதன் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக 19ஆம் ஆண்டிலிருந்து 21ஆம் ஆண்டிலும் தற்பொழுது 22ஆம் ஆண்டிலும் பல்வேறு காரணங்களால் கால்நடைகள் பெருமளவில் இறந்துள்ளன. நீர்நிலைகள் வற்றி போவதே கோடை காலங்களில் இருக்கின்ற ஒரு பிரச்சனை. இதைவிட கடும் மழை பெய்கின்ற காலத்திலே வெள்ளப்பெருக்கிலே மாட்டுப்பட்டு ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்திருக்கின்றன.

தற்போது, முதல் தடவையாக கடந்த 25 -30 ஆண்டுகளுக்குள் இவ்வாறான ஒரு செய்தி எமக்கு கிடைக்கவில்லை. அதாவது குளிர் தாக்கத்தால் மாடுகள் இறந்துள்ளன. இந்த மாடுகள் ஏன் குளிரால் இறந்தன என்றால், 90வீதமான மாடுகளிலே உடம்பில் குளிரைத் தாங்கக்கூடிய அளவுக்கு கொழுப்பு படைகள் இல்லை. கொழுப்பு படை இல்லாமைக்கு முக்கியமான காரணம் கால்நடைகளுக்கு பெரும்போககாலப் பகுதியில் போதுமான தீவனங்கள் கிடைக்காமையே. இதனாலேயே அதிக மாடுகள் உயிரிழந்தன.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒரு நோயின் காரணமாக பல கால்டைகள் உயிரிழந்தன. அவையும் திறந்த வெளி மாடுகளாகவே காணப்படுகின்றன. இம்முறை நடந்த இந்த குளிர் மற்றும் புயல் இவை இரண்டும் ஒன்றாக வந்ததன் காரணமாகவே வழக்கமாக ஒரு புயல் வரும் போது இவ்வளவு மோசமான குளிரை நாங்கள் அனுபவித்ததில்லை.

ஆனால், இந்த வருடம் மிக கடுமையான குளிருக்கு நாங்கள் முகம் கொடுத்திருந்தோம். வேகமான காற்று - 40- 50 கிலோமீற்றர் வேகத்தில் அடித்த காற்றால் வடக்கு மாகாணத்தின் கிழக்குப் பிரதேசத்தில் பெரும்பாலான பண்ணைகள் இவ்வாறான தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன. கால்நடைகள் புதிய பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றன. எனவே எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள கட்டாக்காலி மாடுகளை இவ்வாறு திறந்தவெளி மாடுகளாக பராமரித்து வந்தால் இவ்வாறான காலநிலை மாற்றத்தின்போது பல அழிவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும்.

இந்த நிலைமைக்கு காரணம் பண்ணையாளர்களுடைய அலட்சியம் என்றும் கூறலாம். காரணம் பெரும்பாலான பண்ணைகள் பதிவு செய்யப்படாதவையாக உள்ளன. பதிவு செய்யப்படாதது மட்டுமல்லாது அவற்றுக்குக் காது இலக்கங்கள் அடிக்கப்படுவதில்லை. தடுப்பூசிகள் ஏற்றப்படுவதில்லை. தடுப்பூசிகளுக்காக கால்நடைகள் உற்பத்தி சுகாதார ஊழியர்கள் அந்த இடங்களுக்கு செல்லும்போது இந்த கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான ஒத்துழைப்பை பண்ணையாளர்கள் நமக்கு வழங்குவதில்லை.

இவற்றை தவிர, அதாவது உரிமையை மாத்திரம் தாங்கள் வைத்துக் கொள்கின்றார்கள் என்னுடைய மாடு 200, 400 மாடு என உரிமையை மட்டும் வைத்துக் கொள்கின்றார்கள். ஆனால், தேவையான நேரத்தில் அந்த மாடுகளை விற்பனை செய்து வருமானத்தை பெற்றுக் கொள்கின் றார்கள். ஆனால் அவற்றுக்கு உரிய பராமரிப்பு இல்லை என்று சொல்லும் அளவுக்கு மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

பெரும்பாலும் உயிரிழந்த மாடுகளிலே பால் உற்பத்தியில் ஈடுபடுகின்ற அல்லது சரியாக உணவுகள் கொடுத்து கவனிக்கப்பட்ட மாடுகள் இல்லை. உயிரிழப்புகள் முழுமையாக மேய்ச்சலுக்கு சென்று புயல் குளிரில் அகப்பட்ட மாடுகளாகவே காணப்படுகின்றன. ஆகவே இவ்வாறான மாடுகளுக்கு எதிர்காலத்தில் இவ்வாறான இழப்புகள் ஏற்படாமல் தடுக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சில நடவடிக்கைகள் - சில சட்டங்களையும் பயன்படுத்தி கட்டாயமாக செய்யவேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறான மாடு வளர்ப்பை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தேவை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்ற முறையிலும் அதே நேரத்திலே உள்ளூராட்சி திணைக்களம் என்ற முறையிலும் அரசாங்கத்துக்கும் இருக்கின்றது.

இந்த வகையிலே இப்படியான ஒரு நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களை பயன்படுத்த வேண்டும். அந்த சட்டங்களை பயன்படுத்துவதற்குரிய அதிகாரத்தை உள்ளூராட்சி திணைக்களம் கொண்டிருக்கின்றது. ஆகவே எவ்வகையான சட்டங்கள் இந்த கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு உள்ளன. அவற்றின் மூலமாக இந்த கட்டாகாலி மாடுகளை எந்தளவு தூரத்திற்கு நாங்கள் கட்டுப்படுத்த முயல வேண்டும் என்பது தொடர்பில் நாங்கள் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருடனும் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

கால்நடைகளை பொறுத்தவரை உற்பத்தி திறன் கூடியதாக குறைந்ததா என்பதை விட அவைகளும் எங்களுடைய மக்களுடன் வாழ்க்கையிலே ஒன்றி ணைந்து அவர்களுடைய வருமானத்துக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. கால்நடைகள் இலங்கை மக்களிலே இந்துக்கள் - பௌத்தர்கள் உயிர்களை மதிப்பதால் இவற்றை ஒரேடியாக அழித்து விடுவதோ அல்லது கொன்று விடுவதோ என்பது சாதாரண நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத விடயம்.

ஆகவே முடியுமான அளவுக்கு இந்த கால்நடைகளை பாதுகாக்க கூடியதாகவும் இந்த கால்நடைகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த கூடியதாகவும் நாங்கள் சில திட்டங்களை முன்வைக்க வேண்டியது அவசியமாகும். வடக்கு மாகாண ஆளுநருடைய எண்ணத்தில் உருவான பாதுகாப்பான புகலிடங்கள் இந்தியாவிலேயே இருக்கின்றது போல கட்டாக்காலி மாடுகளை அவைகளை ஒரு ஜீவராசிகளாக கணித்து அவர்களுக்கு ஒரு வாழ்விடத்தை கொடுக்க வேண்டும் அவர்களுக்கு உணவை வழங்க வேண்டும்.

உணவும் அவர்களுக்கான உறையுளும் வாழுகின்ற உரிமையும் மனிதருக்கு இருப்பதைப் போல சகல மிருகங்களுக்கும் இருக்கின்றது. இதை உறுதி செய்வது எமது அரசாங்கத்தினுடைய சட்டங்களிலேயே இருக்கின்றன. ஆகவே, இந்த மிருகங்களை நாங்கள் வதை செய்யாது அவற்றுக்கு ஒரு பொருத்தமான வாழ்விடத்தை வழங்கும் அதே நேரம் விவசாயம் மற்றும் வீதி போக்குவரத்து போன்றவற்றுக்கு இடையூறு இல்லாதவாறு செய்யக்கூடிய மிருகங்களுக்கான புகலிடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவற்றுக்கான கட்டமைப்புகளை மேற்கொள்ள உணவை வழங்குவதற்கு போன்றவற்றுக்கு நிறைய நிதி தேவைப்படும். அதே நேரம் அந்த கால்நடைகளில் இருந்து கிடைக்கக்கூடிய பல்வேறு வருமானங்கள் - அவ்வாறான புகலிடத்தை நடத்துபவர்களுக்கு ஓரளவு வருமானத்தை கொடுக்கக்கூடும். ஆகவே, இதனை பண்ணையாளர்கள் தங்களால் பராமரிக்க முடியாது என கருதுகின்ற மாடுகள் அல்லது வீதிகளிலே எந்தவித உரிமையாளர்களும் இல்லாத மாடு களை புகலிடங்க ளில் வளர்க்க தல் என்பது ஆளுநரின் எண்ணமாக இருக்கிறது.

என்றாலும் இவ்வாறான ஒரு நடவடிக்கை செய்வதற்கு நாங்கள் பலரின் ஆதரவை - நிதி மற்றும் ஏனைய ஆதரவுகளை பெறவேண்டியுள்ளது. எங்களு டைய திணைக்களத்தை பொறுத்தவரை இவ்வாறான நிலையங்களிலே வளர்க்கப்படுகின்ற மாடுகளுக்கான சுகா தாரம் அல்லது அவற்றுக்கான சுகநலன்களை பராமரிப்பதற்கு அவர்களுக்கு வருத்தம் வரும்போது அதற்கான சிகிச்சை தொழில்நுட்ப ஆலோசனைகளை நாங்கள் வழங்க தயாராக உள்ளோம். •

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்









**திரைப்படம் - அவதார் -2**
**இயக்கம் - ஜேம்ஸ் கமரூன்**
**இசை - சைமன் பிராக்ளன்**
**நடிப்பு - சாம் வொர்த்திங்டன், ஜோ சால்டனா**

ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் 2009 இல் வெளிவந்து உலகளவில் ரசிகர்களை வியக்க வைத்த ஒரு படம் ‘அவதார்’. இப்படி ஒரு விஞ்ஞானபூர்வ படமா என படத்தைப் பார்த்து அப்போது வியக்காதவர்களே இல்லை. இந்தப் படத்தின் இரண்டாம் பாகம்தான ‘அவதார் – த வே ஒவ் வோட்டர்’.

முதல் பாகத்தில் பண்டோரா உலகத்தில் உள்ள நாவி இன மக்களுக்கும், அங்கு அந்த மக்களுடன் பழகி ஆராய்ச்சி செய்வதற்காக நாவி இன மனிதனாக உருமாறி அனுப்பப்பட்ட கதாநாயகன் கடைசியில் நாவி இன மக்களுக்காகவே போராடுவதாக படம் முடிந்தது. நாவி இன மக்களை அழிக்க இராணுவத்தின் கேணல் தனிப்படையுடன் செல்ல அவரை கதாநாயகன் கொல்வதுதான் படத்தின் உச்சக்கட்டம்.

இந்த இரண்டாம் பாகத்தில் அந்த கேணல், நாவி இன மனிதனாக உருமாறி மீண்டும் பண்டோரா உலகத்துக்கு செல்கிறார். கதாநாயகனைத் தேடிக் கண்டு பிடித்து அழிக்கும் வெறியுடன் இருக்கிறார். மனைவி, இரண்டு மகன், இரண்டு மகள் என குடும்ப வாழ்க்கையில் இருக்கும் கதாநாயகன் ஜேக் சல்லி தன்னைக் கொல்ல கேணல் வருவது தெரிந்து, குடும்பத்துடன் ‘கடல்வாசிகள்’ என அழைக்கப்படும் மற்றோர் இனத்துடன் அடைக்கலமாகிறார்.

அங்கும் கேணல் செல்ல அவரை எதிர்த்து ஜேக் சல்லி எப்படிப் போராடுகிறார் என்பதுதான் இந்த இரண்டாம் பாகத்தின் கதை சுருக்கம். இரண்டாம் பாகத்தில் கதாநாயகன் மட்டுமல்லாது அவரின் வாரிசுகளும் வில்லனை எதிர்த்து அப்பாவுக்குத் துணையாகப் போராடுகிறார்கள்.

முதல் பாகத்தில் நமக்கு எல்லாமே புதிதாகத் தெரிந்தது. பண்டோரா, பத்து அடி உயர நாவி இனம், இராணுவம், வித்தியாசமான மரம், செடி, கொடி, பூக்கள், விலங்குகள், பறவை இனம், அவர்களின் ஆன்மீக நம்பிக்கை, மூதாதையர் மீதான மரியாதை என அந்த உலகத்துக்கே நம்மை அழைத்துச் சென்றார் ஜேம்ஸ் கமரூன்.

முதல் பாகம் காட்டில் நடந்த கதை என்றால் இந்த இரண்டாம் பாகம் கடலில் நடக்கும் கதையாக உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ‘டைட்டானிக்’ படம் எடுத்து மிரட்டிய ஜேம்ஸ் கமரூனுக்கு மீண்டும் கடல் மீது ஒரு பிரமாண்டத்தைக் காட்டுவது புதிததல்ல. அதேசமயம், உச்சக்கட்டம் கேணல் தலைமையில் வந்த அந்தப் பிரமாண்ட கப்பலில் நடக்கும் சண்டைகள் ‘டைட்டானிக்’கையும் கொஞ்சம் ஞாபகப்படுத்துகின்றன.

3 மணி நேரம் 16 நிமிடக் கதையை இன்னும் நீளம் குறைவாகவே கொடுத்திருக்கலாம். ‘கடல்வாசிகள்’ இனத்துடன் வந்து ஜேக் சல்லி குடும்பம் அடைக்கலமாக காட்டில் இருப்பது போல கடலில் இருக்க முடியாது என ஜேக் குடும்பத்துக்கு கடல் வாசிகளின் தலைவர் அதற்காக பயிற்சி கொடுக்கிறார். அந்தப் பயிற்சிக் காட்சிகள் எல்லாம் மிகவும் நீளமானவை. அதன் பிறகு பிரமாண்டமான திமிங்கிலம் போன்ற ஓர் உயிரினத்துடன் ஜேக்கின் இரண்டாம் மகன் நெருக்கமாகப் பழகும் காட்சிகள் சற்றே போரடிக்கின்றன.

பெரிய திருப்பங்கள் கதையில் இல்லாதது ஒரு குறை. தனது மனைவி, வாரிசுகளைக் காப்பாற்ற கதாநாயகன் எப்படிப் போராடுகிறார் என்ற ஒரு வரிக் கதையைச் சுற்றியே காட்சிகள் நகர்கின்றன. கேணல் தாக்குவதும், பதிலுக்கு ஜேக் எதிர்த்தாக்குதல் கொடுப்பதுமாக மட்டுமே இடைவேளைக்குப் பின்வரும் காட்சிகள் நகர்கின்றன. சில இடங்களில் அடுத்து என்ன நடக்கும் என்றும் ஊகிக்க முடிகிறது.

ஆனாலும், கடல், கடல் சார்ந்த இடம், கடல் வாழ் உயிரினங்கள், பிரமாண்டமான ‘டுல்குன்’ என திரையில் பெரும் மாயாஜாலத்தை ஏற்படுத்தியிருக்கிறார் ஜேம்ஸ் கமரூன். 3டியில் பார்க்கும் போது அவை கண்களுக்கு விருந்தாக உள்ளன.

ஜேக் சல்லி ஆக சாம் வொர்த்திங்டன், அவரி மனைவி நேய்த்திரி ஆக ஜோ சால்டனா நடித்திருக்கிறார்கள். பொறுப்பான பெற்றோர்களாக பாச மழை பொழிகிறார்கள். அவர்களது வளர்ப்பு மகள் கிரி ஆக சிகோர்னி வீவர், மூத்த மகனாக ஜேமி பிளாட்டர்ஸ், இரண்டாவது மகனாக பிரிட்டைன் டால்டன், கடைசி மகள் டுக் ஆக டிரினிட்டி ஜே லி பிளிஸ் நடித்திருக்கிறார்கள். கேணலாக வில்லன் கதாபாத்திரத்தில் ஸ்டீபன் லாங் அதிரடி காட்டியிருக்கிறார். அடுத்த பாகத்திலும் இந்தக் கதாபாத்திரத்திற்கு வேலை இருக்கிறது.

முதல் பாகம் அளவுக்கு படம் பெரிய அளவில் வரவேற்பை பெறுமா என்பது சந்தேகமாக இருந்தாலும் வசூலைக் குவிக்க வாய்ப்புள்ளது. வி. எவ். எக்ஸ் காட்சிகள் ஒவ்வொன்றும் மிரட்டலாக அமைந்துள்ளதால் ஒரு முறையாவது படத்தைப் பார்க்க வேண்டும் என்று ‘அவதார்’ முதல் பாகத்தின் ரசிகர்கள் விரும்புவார்கள். அதுவே ஜேம்ஸ் கமரூனுக்குக் கிடைத்த வெற்றி.

## ஷ்ரத்தாவின் கலியுகம்



விக்ரம் வேதா, நேர்கொண்ட பார்வை உள்ளிட்ட படங்களில் நடித்த ஷ்ரத்தா சிறீநாத் அடுத்து ‘கலியுகம்’ படத்தில் நடித்துள்ளார்.

இதில், ஆடுகளம் கிஷோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். பிரமோத் சுந்தர் இயக்கியுள்ளார். படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடக்கின்றன.

படம் பற்றி இயக்குநர் கூறுகையில், “மூன்றாம் உலகப் போருக்கு பின் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை இந்த படம் விவரிக்கிறது. உலகில் பல நாடுகள் சந்திக்க உள்ள இழப்புகள், சமகால நெருக்கடிகளும் இந்த படத்தில் இடம் பெறுகிறது” என்றார்.



## மீண்டும் கூட்டணி!

கமல்ஹாசனின் விக்ரம் படத்தில் அவருடன் இணைந்து விஜய் சேதுபதி, பஹத் பாசில் போன்றவர்களும் முக்கிய வேடங்களில் நடித்திருந்தார்கள்.

அந்தப் படத்தின் வெற்றிக்கு பிறகு தற்போது சங்கர் இயக்கும் இந்தியன் -2 படத்தில் நடித்து வருகிறார் கமல்ஹாசன். அடுத்த படியாக மணிரத்னம் இயக்கும் படத்தில் நடிக்கும் கமல், எச்.விநோத் இயக்கும் இன்னொரு படத்திலும் நடிக்கப் போகிறார்.

இந்த படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிக்கிறது. இந்தப் படத்திலும் விஜய் சேதுபதி எதிர்மறை பாத்திரத்தில் நடிக்கப்போகிறார். கமலின் 233ஆவது படமான இந்தப் படம் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.



## புதியவர் ஏற்படுத்தும் பரபரப்பு

தெலுங்கு திரையுலகத்தில் அவ்வப்போது சில புதிய நடிகைகள் பரபரப்பை ஏற்படுத்துவார்கள். இப்போது சிறீ லீலா என்ற புதிய நடிகை ஏற்படுத்தியிருக்கிறார்.

தெலுங்கில், தற்போது ரவி தேஜா ஜோடியாக ‘தமாக்கா’ படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தப் படம் அடுத்த வாரம் வெளியாகவுள்ளது. அடுத்து, மகேஷ் பாபு படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

21 வயதே ஆன சிறீ லீலாவுக்கு அதற்குள் ரசிகர்கள் அதிகமாகிவிட்டார்கள். தெலுங்கில் சிறீ லீலா நடித்து ஒரே ஒரு படம் மட்டுமே வெளிவந்திருந்தாலும் புதிய படங்களில் நடிக்க அவர் ஒன்றரை கோடி சம்பளம் கேட்கிறார் என்று கூறப்படுகிறது. இவரை விரைவில், சிறீ லீலா வைத் தமிழிலும் எதிர்பார்க்கலாம்.

## ஜீ. வி. - ஐஸ்வர்யா இணைவு!

‘செத்தும் ஆயிரம் பொன்’ எனும் திரைப்படத்தை இயக்கிய இயக்குநர் ஆனந்த் ரவிச்சந்திரன் இயக்கத்தில் தயாராகும் பெயரிடப்படாத புதிய படத்தில் முதன்முறையாக ஜீ. வி. பிரகாஷ் குமாரும், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் இணைந்து முதன்மையான கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள்.

இந்த திரைப்படத்திற்கு கதையின் நாயகனாக நடிக்கும் ஜீ. வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார்.






## காதல் தோல்வியின் தேசிய கீதம்!

இந்த உலகம் காதலால்தான் இயங்கி வருகிறது. காதல் என்ற ஒற்றை சொல்லுக்கு பின்னால் இருக்கும் வலிகள் ஏராளம். கணவனால், காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்களின் சர்வதேச கீதமாக இந்த பாடல் மாறியுள்ளது என்றால் அந்த வரிகளுக்கு இருக்கும் சக்திதான் இதற்கு காரணம்.

இந்தப் பாடலை நமது நாட்டின் அம்பாறை - பொத்துவிலை சேர்ந்த கவிஞர் அஸ்மின்தான் இந்தப் பாடலை எழுதியுள்ளார். உலகம் முழுவதும் ஒரு கோடிக்கும் அதிகமான ரசிகர்களால் ‘ஐயோ சாமி’ பாடல் ரசிக்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

# மெஸ்ஸி எதிர் எம்பாப்பே வெல்லப்போகும் வீரர் யார்?



தொடர்ந்து 4 முறை பலோன் டி ஒர் விருது வென்று உலகின் அதிசிறந்த வீரராகக் கருதப்பட்ட ஒரு நட்சத்திரம், 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் ஒட்டுமொத்த தேசத்தின் கனவுகளோடு ஆர்ஜென்ரீனா களம் கண்டது. பிரேசிலில் நடந்த அந்த உலகக் கிண்ணத்தில் போஸ்னியா அணியுடனான முதல் போட்டியில், 3 வீரர்களை கடந்து அந்த நட்சத்திரம் அடித்த கோல், ஆர்ஜென்ரீனா அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றது. மெஸ்ஸி எனும் துருவ நட்சத்திரம்தான் அது-

இரண்டாவது போட்டியில் ஈரானுடன் கடுமையாக போராடினாலும், 3ஆவது போட்டியில் நைஜீரியா, சுவிற்சர்லாந்துடனான 16 அணிகள் சுற்றுப் போட்டி என, மெஸ்ஸியின் அபார ஆட்டத்தால் வெற்றி கண்ட ஆர்ஜென்ரீனா , காலிறுதியில் பெல்ஜியத்தை கிறங்கடித்தது. இதன் மூலம் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக ஆர்ஜென்ரீனாவை அரையிறுதிக்கு அழைத்துச் சென்றார் லயனல் மெஸ்ஸி.

பரபரப்பான அந்த அரையிறுதி போட்டியில் சமநிலை தவிர்ப்பு உதை முறையில் நெதர்லாந்தை வென்றது ஆர்ஜென்ரீனா. ஆர்ஜென்ரீனாவின் 28 ஆண்டுகால கனவை நிறைவேற்றும் அந்த நாளும் வந்தது. பிரேசிலை அதன் சொந்த மண்ணிலேயே பந்தாடிய ஜேர்மனியுடன் மல்லுக்கட்டிய ஆர்ஜென்ரீனா, ஆட்டத்தை கூடுதல் நேரம் வரை எடுத்து சென்றது. அப்போது மாற்று வீரராக வந்த ஜேர்மனியின் மரியோ கோட்ஸே, ஆர்ஜெனரீனாவுக்கு எமனாக மாறினார்.

113ஆவது நிமிடத்தில் அவர் அடித்த கோல் மெஸ்ஸியின் உலகக் கிண்ணக் கனவை சுக்குநூறாக்கியது. நொறுங்கிய இதயத்துடன் வெளியேறியது ஆர்ஜென்ரீனா. தனது ஒப்பற்ற திறமையால் ஆர்ஜெனரீனாவை இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்ற மெஸ்ஸிக்கு அந்தத் தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருது வழங்கப்பட்டது.



உலகக் கிண்ணத்தை வெல்வதையே வாழ்நாள் இலட்சியமாய் கொண்டிருக்கும் மெஸ்ஸிக்கு, இந்த தொடரில் அது சாத்தியமாக இன்னும் சில மணி நேரங்களே உள்ளன.

எல்லா பக்கத்தின் முடிவிலும், முற்றுப்புள்ளி என்பது எப்போதும் முடிவல்ல. அது அடுத்த பக்கத்தின் தொடக்கம் என்பதே நிதர்சனமான உண்மை. 18 வயதினில், இளம் பருவத்தில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து ஒரு அணியில் ஒப்பந்தம் செய்ய வேண்டிய அளவுக்கு, ஒருவரிடம் என்ன இருக்கிறது எனப் பல கேள்விகள் ஒரு நாள் எழுந்தன. அப்போது தான் 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணமும் வந்தது.

தான் யார் என்பதை உதைபந்தாட்ட உலகுக்கு நிரூபித்தார் அந்த இளம் நட்சத்திரம். புயலென வேகம், எதிரணி வீரர்களை கதிகலங்க வைக்கும் ட்ரிபிளிங் திறன், துல்லியமாக கோல் அடிக்கும் யுக்தி என ஒரு நவீன உதைபந்தாட்ட வீரருக்கான அத்தனை திறன்களும் அவரிடம் நிரம்பியிருந்தன. ஆம் அதுதான் கிளையன் எம்பாப்பே எனும் தொடக்கப் புள்ளி.

ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான 16 அணிகள் சுற்றுப் போட்டியில் அவர் ஆடிய பேயாட்டம், மெஸ்ஸியின் அணியை தொடரில் இருந்தே வெளியேற்றியது. இறுதிப்போட்டியில் குரோஷியா அணிக்கு எதிராக சுமார் 25 அடி தூரத்தில் இருந்து அவர் அடித்த கோல், பிரான்ஸ் அணியை கிண்ணத்தை முத்தமிட வைத்தது. உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் கோல் அடித்த இளம் வீரர்கள் பட்டியலில் ஜாம்பவான் பீலேவுடன் அவரின் பெயரும் சேர்ந்தது.

2018இல் பல கேள்விகளுக்கு மத்தியில் விடை கொடுத்த கிளையன் எம்பாப்பே, தற்போது அஸ்தமனமான பல சூரியன்களின் மறு உதயமாக உருவெடுத்து வருகிறார். காலம் காலமாகப் போற்றும் நட்சத்திரங்களின் வரிசையில் வரும்காலம் நோக்கிய கனவோடு பிரான்ஸ் நாயகன் எம்பாப்பே.

இரு பக்கத்தின் பலமும் உச்சத்தை தொட்டிருக்க, இறுதிப் போட்டியில் உலகக் கிண்ணத்தைத் தழுவப் போவது யார் என்ற கேள்வி உதைபந்தாட்ட ரசிகர்களின் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. கட்டார் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில், வெல்லப் போவது மெஸ்ஸியின் மந்திரமா? எம்பாப்பேவின் மாயாஜாலமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்..!

# ஒரேயொரு போட்டியில் மெஸ்ஸியின் சாதனைகள்!

கட்டார் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் அரை இறுதி ஆட்டத்தில் லயனல் மெஸ்ஸி, ஜூலியன் அல்வரெஸ் ஆகியோரின் அற்புதமான ஆட்டத்தால் குரோஷியாவை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆர்ஜென்ரீனா அணி. கடந்த 8 ஆண்டுகளில் ஆர்ஜென்ரீனா இறுதிப் போட்டியில் கால்பதிப்பது இது 2ஆவது முறையாகும்.

டோஹாவின் லுசைல் மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இரு முறை சம்பியனான ஆர்ஜென்ரீனா, 2018ஆம் ஆண்டு 2ஆவது இடம் பிடித்த குரோஷியாவை எதிர்த்து விளையாடியது. 25ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் என்சோ பெர்னாண்டஸ் இலக்கை நோக்கி தாழ்வாக அடித்த ஷொட்டை குரோஷிய அணியின் கோல்காப்பாளர் டொமினிக் லிவாகோவிச் தடுத்தார்.

34ஆவது நிமிடத்தில் என்சோ பெர்னாண்டஸ் தூக்கி அடித்த பந்தை பெற்ற ஜூலியன் அல்வரெஸ்பாக்ஸ் பகுதிக்குள் நுழைந்து இலக்கை நோக்கி வேகமாக முன்னேறினார். கோல் அடிக்கும் தருணத்தில் குரோஷியாவின் கோல் கீப்பர் லிவாகோவிச் பந்தை தடுக்க முயன்ற போது நெருக்கமான சூழ்நிலையில் அல்வரெஸூடன் மோதினார். இதனால் இத்தாலிய நடுவர் டேனியல் ஓர்சாடோ ஆர்ஜென்ரீனா அணிக்கு பெனால்டி வாய்ப்பை வழங்கினார்.

இதற்கு குரோஷியா அணி வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். வெளியே அமர்ந்திருந்த உதவி பயிற்சியாளர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். இதனால் உதவி பயிற்சியாளர் மரியோ மன்ட்சுகிக்கு சிவப்பு அட்டை வழங்கப்பட்டது. தொடர்ந்து பெனால்டி வாய்ப்பில் லயோனல் மெஸ்ஸி தனது இடது காலால் வலுவாக அடித்த ஷாட் கோல் வலையின் வலது பக்க மேல் கார்னரை துளைத்தது. மெஸ்ஸி வலது பக்கம்தான் அடிப்பார் என சரியாக கணித்து லிவாகோவிச் அந்த பக்கம் பாய்ந்தார். ஆனால் மெஸ்ஸி பந்தை உயரமாக



அடித்து கோலாக மாற்ற ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

அடுத்த 5-வது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா 2-வது கோலை அடித்தது. பாக்ஸ் பகுதிக்கு வெளியே குரோஷியாவின் கார்னரை இடைமறித்த இரு ஆர்ஜென்ரீனா வீரர்கள் பந்தை மெஸ்ஸிக்கு பாஸ் செய்தனர். அவர், பந்தை தொட்ட நிலையில் டிபன்டரின் இடையூறால் சரிந்தார். பந்து ஜூலியன் அல்வரெஸை நோக்கி செல்ல அவர், மின்னல் வேகத்தில் கடத்திச் சென்றார்.

குரோஷியா அணியின் தற்காப்பு பின் தங்கிய நிலையில் ஜோசிப் ஜூரனோவிக், போர்னா சோசா ஆகியோர் பல வீனமாக செயல்பட அவர்களை கடந்து கோல் அடித்து அசத்தினார் ஜூலியன் அல்வரெஸ்.

இதனால் முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 2ஆவது பாதி ஆட்டம் தொடங்கிய நிலையில் குரோஷியாவின் ஜோசிப் ஜூரனோவிக்கின் கோல் அடிக்கும் முயற்சிக்கு ஆர்ஜென்ரீனாவின் கோல்கீப்பர் எமிலியானோ மார்டினெஸ் முட்டுக் கட்டை போட்டார். 69-வது நிமிடத்தில் கோல் கம்பத்துக்கு அருகே குரோஷியாவின் 20 வயதான தடுப்பாட்ட வீரர் ஜோஸ்கோ க்வார்டியலை தனது மாயாஜாலத்தால் இலாவகமாக கையாண்டு பந்தை ஜூலியன் அல்வரெஸூக்கு தட்டி விட்டார் மெஸ்ஸி.

அவர், அதை கோல் வலைக்குள் திணிக்க ஆர்ஜென்ரீனா 3-0 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலையை நோக்கி நகர்ந்தது. குரோஷியா அணி கோல் அடிக்க எடுத்தமுயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. முடிவில் ஆர்ஜென்ரீனா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆர்ஜென்ரீனா இறுதிப் போட்டியில் கால்பதிப்பது இது 6 ஆவது முறையாகும்.

குரோஷியாவுக்கு எதிராக பெனால்டி வாய்ப்பில் மெஸ்ஸி கோல் அடித்தார். கட்டார் உலகக் கிண்ணத்தில் அவர் அடித்த 5ஆவது கோல் இது. இதன் மூலம் 5 கோல்கள் அடித்து பட்டியலில் முதலிடத்தில் உள்ள பிரான்ஸின் கிளையன் எம்பாப்வேயுடன் இணைந்துள்ளார் மெஸ்ஸி.

**2ஆவது முறையாக...**

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்ய உலகக் கிண்ணத்தில் இரண்டாம் இடத்தைப் பிடித்த குரோஷியா மோசமான தடுப்பாட்டத்தால் தோல்வியை சந்தித்துள்ளது. உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியுடன் குரோஷியா வெளியேறுவது இது 2ஆவது முறையாகும். இதற்கு முன்னர் 1998-ம் ஆண்டு தொடரின் அரை இறுதி சுற்றில் பிரான்ஸிடம் வீழ்ந்திருந்தது குரோஷியா அணி.

**25 ஆட்டங்களில்...**

குரோஷியாவுக்கு எதிரான அரை இறுதி ஆட்டம் ஆர்ஜென்ரீனாவின் லயோனல் மெஸ்ஸிக்கு உலகக் கிண்ணங்களில் 25ஆவது ஆட்டமாக அமைந்தது. இதன் மூலம் ஜேர்மனி வீரர் லோத்தார் மத்தாவ்ஸின் சாதனையை சமன் செய்தார் மெஸ்ஸி.

**சாதனை முறியடிப்பு:**

லயனல் மெஸ்ஸி, குரோஷியாவுக்கு எதிராக கோல் அடித்து அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்டார். உலகக் கோப்பையில் மெஸ்ஸி அடித்துள்ள 11ஆவது கோல் இதுவாகும். இதன் மூலம் ஆர்ஜென்ரீனா அணிக்காக உலகக் கிண்ணங்களில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் மெஸ்ஸி. இந்த வகையில் கேப்ரியல் பாடிஸ்டா 10 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

# அக்கினிப் பரீட்சையில் தமிழரசு!

## கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள தனித்துப்போட்டி என்ற சலசலப்பு!



மாலினி அஜந்தன்

தமிழருக்காகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாது 5 ஆண்டுகள் கழிந்து வரும் நிலையில் அதை நடத்துவதற்கு தமிழ்த் தரப்புக்கள் இந்தியாவிற்கு கடித மொன்றை வரைந்ததோடு வேறு எந்த ஆக்கபூர்வ முயற்சிகளிலும் ஈடுபடாத நிலையில் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான சுருதிக்கு தமிழ்த் தரப்புக்கள் மாற்றப் பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்த வேண்டிய கட்டாயம் தேர்தல்கள் சட்டத்தின்பால் எழுந்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு வும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வாறெனினும் நடத்தி முடித்து விட வேண்டும் என்ற உறுதியோடு காணப்படுகின்றது.

அண்மையில் கம்பஹாவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிஹால் புஞ்சிஹேவா, மக்கள் பிரதிநிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மக்களால் தேர்ந்தெடுக் கப்படாத அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்க தாம் தயாரில்லை எனத் தெரிவித்திருந்தார். அது மாத்திரமின்றி தற்போது உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் புதிய எல்லை நிர்ணய நட வடிக்கை ஒன்றை அரசாங்கம் ஆரம்பித் துள்ளது. முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் அந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டதில் இருந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட அரசாங்கம் முயற்சிக்கின்றது என்ற குற்றச்சாட்டு தமிழ்த் தரப்பு உட் பட நாட்டின் பல்வேறு தரப்புக்கள் மத்தியில் இருந்தும் சுமத்தப்படும் நிலையில், தேர்தல்களை பிற்போட எல்லை நிர்ணயத்தை சாதகமாக்கிக் கொள்வதற்கு ஒருபோதும் தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் வெளியிடாது என்றும் தற்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கி றார். உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுவை விரைவில் கோருவோம் என்றும் அவர் அறிவித்திருக்கின்றார்.

தேர்தல் நடக்குமா? நடக்காதா என்ற பரபரப்புக்கு மத்தியில், தேர்தல் நடந் தால் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்ற வியூகத்தை இப்போது அரசியல் கட்சிகள் வகுக்க ஆரம்பித்துள்ளன. தென்னிலங்கையில் போர் வெற்றி விம்பத்தின் மூலம் மிகப்பெரும் செல் வாக்கைப் பெற்றிருந்த மஹிந்த தரப்பு 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த படுதோல்விக்குப் பின் தனித்து தமது அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள உதவியது 2018ம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலே எனலாம். வீழ்ந்து போன ஒரு தரப்பு எழுந்து வருவதற்கு ஒரு தெம்பை அந்த தேர்தலே கொடுத் தது. தெற்கைப் பொறுத்தவரை ஆட்சி யைப் பிடிப்பதற் கான அதிகாரத்தை பரீட்சித்துப் பார்க் கும் தேர்தலாக உள்ளூராட்சி தேர்தல் இருந்தாலும், வட - கிழக்கைப் பெறுத்த வரை அரசியல் செல்வாக்கை நிலை நிறுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகவே உள்ளூராட்சி தேர்தல் அமைகின்றது.

கடுமையான தமிழ்த் தேசியத்தைப் பேசுவதாகக் கூறிக்கொள்ளும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கூட, தமிழ்த் தேசிய செல்வாக்கைப் பெற் றுக்கொள்ள உள்ளூராட்சி தேர்தலையே பயன்படுத்தியது.

2018 உள்ளூராட்சி தேர்தல், 2020 நாடாளுமன்றத் தேர்தலில் பாரிய பின்ன டைவுகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்வரவுள்ள உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் மூலம் தமது செல் வாக்கை அதிகரிக்க முயற்சியொன்றை எடுக்கவுள்ளதை அறியமுடிகிறது. நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியாவில் இடம்பெற்ற பின்னரும், கடந்த வியாழக் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது ஊடக சந்திப்பிலும் கூட்டமைப்பு வகுக்கவுள்ள புதிய திட்டம் தொடர்பில்







பேசியிருந்தார். முதலில் தமிழரசுக் கட்சியின் ஆராய்வு எனக் கூறியிருந்த சுமந்திரன், இது தொடர்பில் நாடாளு மன்ற வளகத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தன், செல்வம் அடைக்கல நாதனுடனும் பேசியதாக யாழ்ப்பாணத் தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித் துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ கட்சிகள், வெறுமனே தேர்தல் வெற்றிக்காக உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகள் தனித்து சந்திக்க மாட்டாது என்றும், இதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாக கூடி ஆராய்ந்தே முடிவு எடுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளன. புளொட் டின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பி னர் த.சித்தார்த்தன் இது குறித்து வெளி யிட்டுள்ள கருத்தில், “சுமந்திரன் என்னு டன் கலந்துரையாடியிருந்தார். கடந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து இதுபற்றிக் கதைத்தோம். ஆனால், அது எழுந்தமானதாகக் கதைக் கப்பட்டதே தவிர சாதக - பாதகங்கள் அலசி ஆராயப்பட்டவில்லை. 2018 தேர்தலில் தொங்கு சபைகளையே அமைக்க முடிந்தது. இதனால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. எனவேதான் தந்திரோபாயமாக பிரிந்து தேர்தலை சந்திப்பது குறித்துப் பேசினோம். ஆனால் இதற்கு தற்போது அவசியம் எழாது என்று கருதுகிறோம். தந்திரோ பாயத்துக்காக தேர்தலை தனித்து சந்திப் பது என்றாலும் அது குறித்து விரிவாக பங்காளிக் கட்சிகள் அனைத்தும் கூடி ஆராய்ந்தே முடிவு எடுக்கும். அது தமிழி னத்தைப் பாதிக்காததாகவே இருக்கும். வெறுமனே தேர்தல் வெற்றிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை பிரிந்து சந்திக்காது“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவிக்கை யில் “தனித்துக் கேட்கும் முடிவை தமிழரசு கட்சி தனியாக முடிவு எடுக் காது - கலந்துரையாடி முடிவு எடுக்கப் படும் என்றே சுமந்திரன் எம்.பி கூறியுள் ளார். எனவே அப்படிக் கலந்துரையாடி முடிவு எடுக்கும்போது நாம் எமது முடிவை தெரிவிப்போம். தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பாகவே நாம் தேர்தலை எதிர்கொள்வோம். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மட்டும் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட வில்லை. தமிழினத்தின் நன்மைக்காக

**கூட்டமைப்பு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த நிலைமை மாறியமைக்கான காரணங்கள் தொடர்பில் கூட்டமைப்பு உரிய வகையில் ஆராயாது, தேர்தல் வெற்றிக்காக மாத்திரம் வியூகங்களை வகுப்பது அக்னிப் பரீட்சைக்கு ஒப்பானது.**

நாம் ஒன்றிணைந்தே செயற்படுவோம். தேர்தல்களை சந்திப்போம். த.தே.கூ ஒரு கூட்டமைப்பாகப் பதிவுசெய்யப்பட வேண்டும். தனித்தனி அங்கத்துவக் கட்சிகளாக இருக்கும்போது அதில் குழப்பம் ஏற்படுகையில் கட்சி நாகரிகம் கருதி அந்தந்த கட்சிகள் குழப்பம் விளை விக்கின்ற உறுப்பினர்கள் மீது நடவ டிக்கை எடுக்கும் நாகரிகத்தை உறுதி யாகப் பற்றிப் பிடிப்பார்களாயின் குழப் பம் வராது. அதைச்செய்யாது ஏனோ தானே என்று தளம்பல் போக்கிலே பயணித்துக்கொண்டிருப்பதனால்தான் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய மற்றக் கட்சிகளும் தனி ஒரு கட்சி செய்யும் தவறுகளுக்காக சிலுவை சுமக்க வேண்டியிருக்கிறது. உறுதியான முடிவு களை சம்பந்தப்பட்ட கட்சிகள் எடுக்க வேண்டும். அதைவிட்டு மூளைக்கும், வாய்க்கும் சம்பந்தமில்லாமல் பேசுவது பின்னர் அதை மறுப்பது என்ற விடயங் களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் இப்படி தொடர்ந்து நடக்கும். கூட்டமைப்பின் தேர்தலைப் பார்த்தால் யாருடைய ஆசனம் அதிகம் இழக்கப்பட்டிருக்கிறது. யாராலே இந் தப் பின்னடைவை நாம் பெற்றிருக்கி றோம். அதிக ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள்தான் அதிக தோல்வியைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளா விட்டால், இந்தப் பிரச்சினை தொடர்ந் தும் கட்சிகளுக்கிடையில் நீடிக்கும். அதை அங்கத்துவக் கட்சிகளின் தலை மையில் போட்டுவிட்டுத் தப்பிக் கொள்ள முயற்சித்தால் மேலும் கூட்ட மைப்பு பின்னடைவுகளைச் சந்திக்கும். வவுனியாவில் சுமந்திரன் எம்பி தெரி வித்த கருத்துக்கு மாற்று அறிக்கையை நாம் வெளியிட்டமைக்குக் காரணம் என்னவென்றால், நாம் இதையெல்லாம் சீர்செய்யாவிட்டால் யார் சீர் செய்வார் கள் என்றுதான். கூட்டமைப்பிலே திருத்தங்களைச் செய்பவர்களாக நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதனால் எங்கள் மீது காழ்ப்புணர்ச்சிக் கருத்துக்கள் முன்வைக்கப்படலாம். நாம் விமர்சிக்கப்படலாம். ஆனால் கூட்ட மைப்பிற்குள் திருத்தம் செய்து கூட்ட மைப்பு கூட்டமைப்பாகத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமே தவிர உதிரிக ளாக அல்ல“ எனக் குறிப்பிட் டுள்ளார்.

கூட்டமைப்பின் நிலைமை இவ்வாறி ருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த நிலைமை மாறியமைக்கான காரணங்கள் தொடர்பில் கூட்டமைப்பு உரிய வகையில் ஆராயாது, தேர்தல் வெற்றிக்காக மாத்திரம் வியூகங்களை வகுப்பது அக்னிப் பரீட்சைக்கு ஒப்பானது. இது கூட்டமைப்பின் செல் வாக்கை உயர்த்துமா? அல்லது கூட்ட மைப்பை குலைக்குமா? என்ற கேள்வி பலருக்கும் எழுந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.





—— நெற்கொழு தாசன்

# சமரசம் மலர்ஸ்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

இத்தனை வருடமாக இல்லாத பூச்சியா இப்ப வந்திருக்கு. ஒவ்வொரு தடவையும் மைக்ரோஒவனை திறந்து உணவைச் சூடாக்கும்போது பத்துப்பூச்சி என்றாலும் ஓடும். இவ்வளவு காலமுமில்லாமல் இப்ப பூச்சி மருந்து வைக்கப்போறாவாம். ரூர்போய் வீடியோபோட பூச்சி சாட்டு. மனதிற்குள் திட்டிக்கொண்டார். சரி அப்படியாவது வீட்டில் பூச்சி அழிஞ்சுதென்றால் நல்லம்தான் என எண்ணிக் கொண்டார்.

அன்றே பூச்சி மருந்தினை வாங்கி பில்லோடு சேர்த்து மேசையில் வைத்துவிட்டார். பூச்சி மருந்தைக் கண்டதும் மலர்க்கொடியாள் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தார். எந்த நாளில் ரூர் போவது என்று முடிவு செய்வதற்காக கலண்டரை எடுத்தார். அந்த மாதத்தின் கடைசி சனி, ஞாயிறு தினங்களை வட்டம் போட்டுக் குறித்தார். கணவரை அழைத்தார். ஈபிள்ரவர், வைற் சேர்ச், டிஸ்னிலாண்ட் இந்த மூன்று இடத்தில் எதற்கு போவம் என்று கேட்டார்.

உலகளந்தபிள்ளைக்குத் தெளிவாகத் தெரியும் எல்லாம் தீர்மானிக்கப் பட்டுவிட்டதென்று. இருந்தும், எதுவும் சொல்லாமல் இருந்தால் அதற்கொரு கேள்வி வரும். அதைவிட ஏதாவதொரு இடத்தை சொல்லிவிடுவது நல்லம் என்று முடிவு செய்தவர், பாரிசில் அவருக்குத் தெரிந்த ஒரேயொரு இடமான நெப்போலியன் நடந்த தெருவுக்குப் போகலாம்.

செலவும் குறைவு என்றார். அதற்கு மலர்க்கொடியாள் "ம்ம்ம்" என இழுத்துவிட்டு, தெருத் தெருவாக அலையமுடியாது. அதுவும் உங்களையும் இழுத்துக்கொண்டு. வீட்டுக்கு பூச்சிக்கு மருந்து வைத்தால் நாள் முழுக்க வீட்டிற்கு வரவுமேலாது. பேசாமல் டிஸ்னிலாண்டுக்கு போவம் என்று முடித்தார்.

தொடர்ந்து, டிஸ்னிக்கு போறதென்றால் ரிக்கெட் சரியான விலையாக இருக்கும். யாராவது அங்கு வேலைசெய்கிறவர்களைப் பிடித்தால் மலிவாக எடுக்கலாம். தெரிந்தவர்கள் இருந்தால் விசாரித்துப்பாருங்கள் என்று கூறினார். பொறுமையாகக் கவனித்துச் சொன்னதை உள்வாங்கிய உலகளந்த பிள்ளை, "எப்ப போறது" எனக் கேட்டார். சனி அல்லது ஞாயிறு தான் போகணும். சனி என்றால் நல்லம். வெள்ளிக்கிழமை அரை நாள்தான் வேலை. சமைத்து சோறும் எடுத்துக்கொண்டு போகலாம். சனி மருந்தை வைத்தால் ஞாயிறு வீடு கழுவித் துடைக்கவும் வசதி. சனிக்கிழமை போவம். ரிக்கெட் விசாரியுங்கோ என்று முடித்துவிட்டார்.

ரிக்கெட் விசாரியுங்கோ என்று சுலபமாகச் சொல்லிவிட்டாள், இனி அதற்கு என்னபாடு பாடுறதோ எனப் புறுபுறுத்தபடி போனை எடுத்தார். ஒவ்வொரு பெயராகத் தட்டி, அவர்கள் என்ன வேலை செய்கிறார்களென நினைவுக்குக் கொண்டுவந்தார். ஒருவரும் தட்டுப்படவில்லை. போனை மூடிவைத்துவிட்டு யோசித்தார். முக்கூடல் தமிழ்க்கடைப்பொடியன் நினைவுக்கு வந்தான். நாடுகடந்த தமிழீழ அரசில் வெளிவிவகார அமைச்சராக இருக்கும் அவன்தான் இதற்குச் சரியான ஆள் என்று முடிவு செய்தார். எவர் என்ன பிரச்சனை என்றாலும் அவனிடம் போய் சொன்னால், அதற்கு அவனிடம் தீர்வு இருக்கும். நாலுபத்து விடயம் தெரிந்தவன். நாலுபத்துப் பேரோடு பிளங்குகிறவன். அமைச்சர் ஆகுவதென்றால் சும்மாவே. நின்ட இடத்திலேயே என்ன பிரச்சனையென்றாலும் முடித்துவிடுகிற வல்லமை கொண்டவன். நாரை அறியாத குளமில்லை என்பார்கள் இவனும் அதுபோலத்தான். வேறுவழியில்லை போய்க்கேட்பம் என்று கிளம்பினார்.

கடையில் அவனைப் பிடித்து, தம்பி எனக்கொரு உதவி என்று ஆரம்பித்து மலிவாக ரிக்கெட் எடுக்கும் விடயத்தைச் சொல்லி முடித்தார் உலகளந்தபிள்ளை. உதுக்கே யோசித்தனியள், எனக் கேட்டுவிட்டு தொலைப்பேசியை எடுத்து நம்பர் ஒன்றைக் கொடுத்தான். நாலுமணிக்குப் பிறகு அடிச்சு கதையுங்கோ. ஆளுக்கு நாலுமணிக்குத்தான் வேலை முடியும். என்னை சொன்னதாக சொல்லுங்கள். அவன் அங்கதான் வேலை செய்கிறான். எப்படியும் எடுத்துத்தருவான்.

மற்றது அண்ணை, வாறகிழமை சூமில் ஒரு கூட்டம் இருக்கு. இப்ப நாட்டு நிலைமை தெரியும்தானே. கோத்தாவை கிளப்பியாச்சு. அங்க நின்ட பொடியளுக்கு நாங்கள் தான் எல்லாம் செய்தது. மறக்காமல் வாங்கோ கூட்டத்திற்கு. சூமில் நீங்கள் எல்லோரும் வந்து சைன் போட்டால் தான் "ஐநா"க்கு எங்கட பிரச்னையைக் கொடுக்கலாம் என்றான். ஓம் தம்பி கட்டாயம் வருவன் என்றபடி நேரத்தைப் பார்த்தார். நேரம் கிடக்கு. இண்டைக்கு எப்படியும் இந்த அலுவலை முடிச்சுப் போடவேண்டும். கொடியாளிடம் விலையை அதிகமாகச் சொல்லி ஒருபத்து யூரோவை தட்டி எடுத்தால் இரண்டு மூன்று நாளைக்கு என்ர விருபத்திற்கு ஏதும் தின்னலாமெனத் திட்டமிட்டார். அமைச்சரான தமிழ்க் கடைப் பொடியனின் கையைப் பிடித்து நன்றி சொல்லிவிட்டு வேகவேகமாக வீட்டுக்குத் திரும்பினார்.

சரியாக நாலுமணிக்கு அலாரம் வைத்தார். மணிக்கூட்டுக்கு எதிரே அமர்ந்துகொண்டார். டிஸ்னி பெரு நகரமாக விரிந்தது. போட்டோக்களிலும், விளம்பரங்களிலும் மட்டும் பார்த்த இடம் அங்குலம் அங்குலமாக நகர்ந்தது.

எங்கு திரும்பினாலும் சனக்கூட்டம். இதென்ன வல்லிபுரக்கோவில் கடல் தீர்த்தத்திற்குப் போனமாதிரி சனக் கூட்டம். உந்த சனத்துக்குள்ளால் எங்க போறது. எப்படி போறது. எதற்கும் கொடியாளின் கையை பிடித்துக் கொள்ளுவமென்று கையை வீசியபோதுதான், சோபாசெற்றியிலேயே அசந்துபோயிருந்தது புரிந்தது. மணிக்கூட்டைப் பார்த்தார். நாலுமணி ஆகிவிடும்போல இருந்தது. எழுந்து சென்று முகத்தைக் கழுவினார். அலாரம் அடிக்கும் சத்தம் கேட்டது. முகத்தைத் துடைத்தபடி தொலைப்பேசியை எடுத்து தமிழ்க் கடைப் பொடியன் கொடுத்த நம்பரை அழுத்தி அழைப்பை ஏற்படுத்தினார்.

பதிலில்லை. தொலைப்பேசியை வைத்துவிட்டு முகத்தை அழுத்தித் துடைத்தார். இரண்டு நிமிடங்கள் கழித்து மீண்டும் அழைத்தார். கலோ எனப்பதில் கிடைத்ததும், வணக்கம் தம்பி, இங்கை செவ்ரோனில் முக்கூடல் கடை அமைச்சர் தம்பி உங்கட நம்பர் தந்தவர். நீங்கள் டிஸ்னிலாண்டுக்கு ரிக்கெட் எடுத்துக் கொடுக்கிறனீங்களென்று சொன்னவர். என்றதும், மறுபக்கத்திலிருந்து இடைமறித்து, ஓமண்ணை. போனில் இந்த விடையம் கதைக்க வேண்டாம். பின்னேரம் எட்டுமணிபோல அமைச்சரிட்ட வருவன். நேர வாங்கோ கதைப்பம் என்றதும், உலகளந்த பிள்ளைக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஓம் தம்பி. வாறன், மறக்காமல் வாங்கோ என்றபடி அழைப்பை துண்டித்தார். கொடியாள் வந்தவுடன், விளக்கமாகக் கதைத்து விட்டு, பின்னேரம் போய் ரிக்கெட்டை மறிச்சுப்போட வேண்டுமென நினைத்துக்கொண்டார்.




எட்டுமணிக்கு முக்கூடல்தமிழ்க் கடையடிக்கு போனவரை, நீங்கள் தானே டிஸ்னிக்கு போக ரிக்கெட் கேட்டது என விசாரித்தபடி வரவேற்ற பொடியனை மேலும் கீழுமாகப் பார்த்தார். தோற்றத்தைப் பார்த்து ஆளை எடை போட்டார். மனதுக்குள் திருப்திப்பட்டுக்கொண்டார். வேலை முடிந்துவந்த கொடியாள் சொன்ன எல்லாவற்றையும் திரும்ப ஒருமுறை நினைவுக்குக் கொண்டுவந்தார். முக்கியமா ஆளைப்பாருங்கோ. உந்த குரூப்பொடியள் மாதிரி நிண்டால் ரிக்கெட் வேண்டாம். கதைபேச்சு நல்லமாதிரி பண்பாடாக இருந்தால் கதையுங்கோ. சும்மா கண்ட நிண்டவங்களிட்ட உதவிக்குப்போய் கரைச்சல் படக்கூடாது. பிறகு குருட்டு ஆந்தையைக் கூப்பிட்டு அடுப்பங் கரையில் விட்டமாதிரிப்போடும். சோர்ந்துபோய் நின்றவனை மீண்டும் ஒருமுறை முழுதாகப் பார்த்தார்.

வேலைசெய்த களையோடு, நெஞ்சுக்கூடுதள்ள, வாடிப்போய் நோஞ்சானாக நின்ற அவனின் தோற்றத்தைப் பார்த்ததும் தடுமாறிப் போனார். தம்பி ஏதும் குடிக்கிறீங்களா என்று உடனேயே கேட்டார். இல்லை வேண்டாம். அதெல்லாம் பிறகு பார்க்கலாம். நீங்கள் எப்ப டிஸ்னிக்கு போகப் போறிங்க. எத்தனை பேர் போக இருக்கிறீங்கள் என்று கேட்டான்.

தம்பி வாற சனிக்கிழமை. நாங்கள் எட்டுப்பேர். உங்களுக்கு ஓகே என்றால் இண்டைக்கு காசைத் தல்லாம். எத்தனை யூரோ என்று சொல்லுங்கள் என்றார் உலகளந்தபிள்ளை. காசு பிரச்சனையில்லை அண்ணை. சனிக்கிழமை அங்கை வைச்சு தாங்கோ. எட்டுப் பேர் என்றால் மூன்று "சொட்" அடிக்கவேண்டும். ஒரு ஆள் குறையுது அதுதான் யோசிக்கிறன் என்றவனிடம், என்ன தம்பி சொல்லுறியள் ஒன்றும் விளங்குதில்லை. விளக்கமாக சொல்லுங்கோ. சொட் அடிக்கிறது என்றால் என்ன. ஏன் மூன்று சொட். காசு ஏதும் குறைவோ. அப்படி சொட் அடிச்சுப் போனால், எங்களுக்கொரு பிரச்சனையும் வராதுதானேயென்று பதட்டத்துடன் கேட்டார் உலகளந்த பிள்ளை.

அதெல்லாம் பிரச்சனை இல்லையண்ணை. "சொட்" என்றால் எங்களுக்கு வேலைசெய்யுற இடத்தில் தருகின்ற ரிக்கெட்டில் ஒருதடவையில் மூன்று பேரை உள்ளுக்குள்ள விடலாம். அதுதான் மூன்று சொட் என்றால் ஒன்பதுபேர் உள்ளுக்கு போகலாம். நீங்கள் எட்டுப் பேர் என்று சொல்லுறீங்கள், ஒரு ஆளுந்த காசு வீண்தானே. நீங்கள் யாரையயாச்சும் ஒருத்தரகூட கூட்டிவாங்கோவன். ஒரு சொட்-க்கு எண்பது யூரோ படி "மூன்று சொட்"க்கும் தந்தீங்களென்றால் சரி. ஒரு கணம் யோசித்தார். மூன்றுபேருக்கு எண்பது யூரோ. பயங்கர லாபம். இல்லாட்டி ஆளுக்கு எண்பது யூரோ வேண்டும்.

கையூண்டாமலேயே கரணம் போடலாம்போல இது. வேற கதை இனிக் கதைக்கக் கூடாதென முடிவு செய்தவர் சரி தம்பி. சனிக்கிழமை அங்க சந்திப்பம். வெள்ளிக்கிழமை பின்னேரம் உங்களுக்கு கோல் பண்ணுறன். இப்ப அட்வான்ஸ் ஏதும் தரவோ என்று கேட்டார்.

இல்லையண்ணை. இப்ப வேண்டாம். சனிக்கிழமை எட்டுமணிக்கு டிஸ்னியில் நிப்பன். அதில வைச்சுத் தாங்கோ. வரமாட்டியளென்றால் புதன்கிழமைக்கு முதல் அடிச்சு சொல்லுங்கோ. எங்கட ஆக்கள் கனபேர் ரிக்கெட் கேட்டவை. எங்கட அமைச்சர் சொன்னதால் உங்களுக்கு ஓகே பண்ணியிருக்கிறேன். சரி அண்ணை சந்திப்பம் என்றபடி கிளம்பியவன் கண்ணிலிருந்து மறையும் வரைக்கும் பார்த்துக்கொண்டு நின்றார். **(மிகுதி அடுத்த வாரம்...)**

ஈழநாடு



# அசேரியா - பண்டைய நாகரீகத்தின் அடையாளம்:



## மத வன்முறையால் அழிக்கப்படும் அசேரிய மக்களும் சிதைக்கப்படும் பழமையான வரலாற்று மையங்களும்




ஈராக்கில் ஒரு தனித்துவமான இனமாக “அசேரியர்கள்” (Assyrian) கருதப்படுகின்றனர். இருப்பினும் உத்தியோகபூர்வ ஈராக்கிய புள்ளிவிவரங்கள் அவர்களை அரேபியர்கள் என்றே கருதுகின்றன.

பண்டைய மெசொப்பொத்தேமியா மக்களின் வழித்தோன்றல்கள், அசேரியர்கள் அராமை மொழியை பேசுகிறார்கள். அத்துடன் அசேரிய மக்கள் கல்தேயன், சிரிய மரபுவழி, நெஸ்டோரியன் மற்றும் சிரிய கத்தோலிக்க ஆகிய நெறிமுறைகளை பின்பற்றுகின்றனர்.

பண்டைக் காலத்தில் அசேரியா என்பது, டைகிரிஸ் ஆற்றின் மேற்பகுதியைச் சார்ந்த ஒரு நிலப்பகுதியைக் குறித்தது. அசேரியர்கள் ஒரு தனித்துவமான சமூகத்தை உருவாக்குகி வாழ்ந்தார்கள். இப் பகுதியில் பழங்காலத் தலைநகரமாக விளங்கிய அசூர் என்னும் நகரின் பெயரைத் தழுவியே அசேரியா என்னும் பெயர் ஏற்பட்டது.

### வரலாற்று சூழல்:

ஆயினும் மங்கோலிய படையெடுப்புகளால் அசேரியரின் வழிபாட்டு தேவாலயங்கள் பலஅழிந்துவிட்டன. அதன் பின் அசேரியர்கள் அண்டை நாடான குர்திஷ் பழங்குடியினருடன் இணைந்து வாழ்ந்தனர். ஐரோப்பிய காலனித்துவ ஊடுருவல் மற்றும் கிறிஸ்தவ மத பரம்பல் ஆர்வத்தின் விளைவாக, சுன்னி-ஆர் மேனிய பதட்டங்களாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசேரியர்களோ தொடர் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர்.

### ஆர்மேனிய இன படுகொலை:

1915 ஆம் ஆண்டில்,அசேரியர்கள் ரஷ்யப் படைகளால், ஆர்மேனியர்களை படுகொலை செய்யத் தொடங்கிய ஒட்டோமான்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய ஊக்குவிக்கப்பட்டனர்.

1917 இல் ஜாரிஸ்ட் ரஷ்யாவின் சரிவுடன் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு தெற்கு நோக்கி அணிவகுத்துச் செல்ல எஞ்சிய 25,0000 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஈராக்கில் குடியேறினர். முதலாம் உலக போருக்குப் பிறகு அசேரியர்கள் அவர்கள் விரும்பியபடி ஹக்காரிக்குத் திரும்புவது சாத்தியமற்றது. அவர்கள் அங்கு அனுபவித்து வந்த சுயாட்சி மறுக்கப்பட்டது. மேலும் அரபு அரசாங்கத்திற்கும் இடையே அவநம்பிக்கை அதிகரித்தது.

### ஈராக் சுதந்திரத்தின் பின்னர்:

அசேரியர்கள் 1932 இல் ஈராக் பெற்ற சுதந்திரத்தை பிரிட்டிஷ் அரசு தம்மை காட்டிக்கொடுப்பாகக் கருதினர். அதனைத் தொடர்ந்து வளர்ந்து வந்த பதற்றம் 1933 இல் ஒரு பாரிய மோதலுக்கு வழிவகுத்தது. அதைத் தொடர்ந்து ஈராக் இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட தொடர்ச்சியான படுகொலைகள், இதில் 600 முதல் 3,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

அக்காலத்தில் குர்துகளைப் போலவே, சிலர் ஈராக்கிய அரசாங்கத்தை ஆதரித்தனர். மற்றவர்கள் குர்திஷ் தேசியவாத இயக்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர். 1979 இல் பல சிறிய கட்சிகள் இணைந்து அசேரியர் ஜனநாயக இயக்கத்தை உருவாக்கி, 1982 இல் குர் திஷ் ஆயுதப் போராட்டத்தில் முறையாக இணைந்தனர்.

### 1988 இரசாயன தாக்குதல்:

1988 ஆம் ஆண்டு அன்ஃபால் இரசாயன தாக்குதலில் குர்துகளைப் போலவே அசேரியர் கிராமங்களும் மக்களும் பாரிய அளவுல் பாதிக்கப்பட்டனர். அசேரியர் ஜனநாயக இயக்கதஅசேரியர் ஜனநாயக இயக்கம் குர்திஸ்தான் முன்னணியின் ஒரு பகுதியாக இருந்து, 1992 குர்திஸ்தான் தேர்தலில் பங்கேற்றது. ஐந்து இடங்கள் அசேரியர் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

ஈராக் அரசியலமைப்பில் அசேரியர் அங்கீகாரம், முழு கலாச்சார உரிமைகள் மற்றும் சமத்துவம் ஆகியவற்றை அசேரியர் ஜனநாயக இயக்கம் கோரியது. குர்துகள் ஒரு கூட்டாட்சி அரசை அடைந்தால், அசேரியர்கள் அதற்குள் சுயாட்சியைக் கோரினார்கள். ஆனால் பிரிந்து செல்வதற்கான பரவலான விருப்பமும் இருந்தது.

### சதாம் ஹுசைனின் இனப்படுகொலை

குறிப்பாக சதாம் ஹுசைனின் இனப்படுகொலையான அன்ஃபால் தாக்குதலில் மற்ற கிறிஸ்தவ சிறுபான்மையினருடன் அசேரியர்களும் பாதிக்கப்பட்டனர்.

1988 இல் தொடங்கப்பட்ட இந்த கொடூரத்தின் விளைவாக சுமார் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.

அல்லது கட்டாயமாக காணாமல் போயினர். பெரும்பாலும் குர்துகள், உட்பட பல்வேறு சிறுபான்மையினரைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

### அரேபிய மயமாக்கல் கொள்கை:

இக்கோரங்களின் பின்னர், காணாமல் போனவர்கள் மற்றும் கொலைகள், அரபு மயமாக்கல் கொள்கை சிறுபான்மையினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக்கொள்ள அதிகாரபூர்வமாக கட்டாயப்படுத்தியது.

ஈராக்கில் 1987 மற்றும் 1997 தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புகள் அனைத்து அசேரியர்களும் அரபு அல்லது குர்திஷ் அடையாளத்தை தேர்வு செய்ய கட்டாயப்படுத்தியது. அசேரியர் என அடையாளப்படுத்த வலியுறுத்தியவர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர் அல்லது தன்னிச்சையாக அரபு அல்லது குர்து என பதிவு செய்யப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டில், ஆணை 199 ஒவ்வொரு ஈராக்கியருக்கும் தங்கள் இன அடையாளத்தை மாற்றுவதற்கும் அரேபியரைத் தேர்ந்தெடுப்பதற்கும் ‘உரிமையை’ அறிவித்தது. நூறாயிரக்கணக்கானோர் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தனர், குறிப்பாக கிர்குக்கைச் சுற்றியுள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் சிறுபான்மையினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக் கொள்ள அதிகாரபூர்வமாக கட்டாயப்படுத்தியது.

### அசேரியர் நிறுவனங்கள் குறிவைக்கப்பட்டன:


உயர் பதவிகளில் உள்ளவர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் பணிபுரிந்த கிறிஸ்தவ அசேரியர்கள் குறிப்பாக ஆபத்தை எதிர் நோக்கினர். 22 செப்டம்பர் 2005 இல் அசேரிய ஆர்வலரும் முன்னாள் ஈராக்கிய இடம்பெயர்வு அமைச்சருமான பாஸ்கேல் வார்தாவைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட ஆறு அசேரியர் பாதுகாப்புக் காவலர்களை ஏற்றிச் சென்ற டிரக் மீது துப்பாக்கி ஏந்திய நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆறு பேரில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

2005 நவம்பரில் மொசூலில் துப்பாக்கி ஏந்தியவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் கிறிஸ்தவ அரசியல் கட்சியான அசேரியர் ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

இதேபோல் ஏப்ரல் 2008 இல் அசேரியர் ஆர்த்தடாக்ஸ் பாதிரியார் ஃபாதர் அடெல் யூசுப் மத்திய பாக்தாத்தில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### 2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசின் கொடூரம்:

2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசினால் (ஐஎஸ்.ஐஎஸ்.) அசேரியர்களுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தியது.




2014 ஆம் ஆண்டு மொசூல் நகரை ஐஎஸ் ஐஎஸ் கைப்பற்றியதால் நூற்றுக்கணக்கான அசேரிய கிறிஸ்தவ குடும்பங்கள் குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நினிவா சமவெளி மற்றும் பகுதிகளை நோக்கி தப்பி ஓடியனர்.

மீதமுள்ள கிறிஸ்தவ குடும்பங்கள் இஸ்லாத்திற்கு மாற வேண்டும், ஜிஸ்யா (முஸ்லிம் அல்லாதவர்களுக்கு விதிக்கப்படும் அஞ்சலி) அல்லது கொல்லப்பட வேண்டும் என்று இறுதி எச்சரிக்கையைப் பெற்றன. ஜூலை 2014 க்குள், கிட்டத்தட்ட அனைத்து அசேரிய கிறிஸ்தவ குடும்பங்களும் நகரத்தை விட்டு வெளியேறின. ஐ.எஸ்.ஐ.எஸ் மொசூலில் உள்ள கிறிஸ்தவ வீடுகளை இஸ்லாமிய அரசின் சொத்தாக நியமித்து, அவற்றினை கொள்ளையடித்தது.

### ஐஎஸ்ஐஎஸ் கட்டுப்பாடும் கொடூரமும்:

ஆகஸ்ட் 2014 இல் டெல் இஸ்கோஃப், பர்டல்லா, கரம்லெஸ், பட்னாயா, டெல் கீஃப் மற்றும் ஈராக்கின் மிகப்பெரிய கிறிஸ்தவ நகரமான கராகோஷ் உட்பட நினிவா சமவெளிகளில் உள்ள அனைத்து அசேரியர்ப் பகுதிகளையும் ஐஎஸ்ஐஎஸ் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. சுமார் 200,000 பேர் குர்திய முசுபு பகுதியை நோக்கி ஓடியதால், இது இரண்டாவது அலை இடப்பெயர்வை ஏற்படுத்தியது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் அசேரியர குடும்பங்களை தங்கள் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்லும்போது கொள்ளையடித்தனர். அவர்களின் பணம், கார்கள், நகைகள் மற்றும் அடையாள ஆவணங்களை பறிமுதல் செய்தனர். அத்துடன் தப்பி ஓடிய அசேரியர்களின் வீடுகள் மற்றும் பண்ணைகளையும் சூறையாடினர்.

அசேரியர்கள் தங்கள் வரலாற்று, கலாச்சார மற்றும் மத பாரம்பரியத்தை வேண்டுமென்றே இஸ்லாமிய அரசால் அழித்தமையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

### பழமையான வரலாற்று தளங்களை அழிப்பு

2014 இல் தொடங்கிய ஐஎஸ்ஐஎஸ் கொடூரம் பல அசேரியர் தேவாலயங்கள், கல்லறைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான வரலாற்று தளங்களை அழித்தது. இவற்றுள் திக்ரித்தில் உள்ள அசே ரியர்ன் பசுமை தேவாலயம், ஹத்ராவின் பண்டைய நகரம் மற்றும் வரலாற்று அசேரியர் தலைநகரான நிம்ருத் ஆகியவை அடங்கும். இந்த குழு மொசூல் அருங் காட்சியகத்தில் உள்ள ஏராளமான தொல்பொருட்களையும் அழித் தது, அவற்றில் பெரும்பாலானவை அசேரியர் நாகரிகத்துடன் தொடர்புடையவை ஆகும்.

### அரை-தன்னாட்சி பாதுகாப்பான பகுதி:

சமீபத்தில், சில அசேரியர் குழுக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில், நினிவா சமவெளிகளில் சிறுபான்மையினருக்கான அரை-தன்னாட்சி ‘பாதுகாப்பான பகுதி’க்கான முன்மொழிவின் பின்னால் தங்கள் ஆதரவை வீசியுள்ளனர்.

ஈராக் அரசாங்கம் மற்றும் முசுபு இரண்டின் மீதும் உள்ள அவநம்பிக்கையின் காரணமாக, இந்த சர்வதேசப் பாதுகாப்பின் சில கூறுகளை பலர் பரிந்துரைக்கின்றனர். இந்தத் திட்டத்தில், சிறுபான்மையினருக்கு முந்தைய ஏற்பாட்டிற்கு மாறாக, தங்கள் சொந்த பாதுகாப்பை நிர்வகிக்கும் அதிகாரமும் வழங்கப்படும்.

இதன் மூலமே அசேரிய மக்கள் தங்கள் பண்டைய நாகரீக சிறப்புடன் சுயநிர்ணயத்துடன் வாழ முடியும் என கருதுகின்றனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**18.12.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**18.12.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை ஸ்ரீ காந்திதாசன்

அம்பாறை அக்கரைப்பற்று பளையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஸ்ரீ காந்திதாசன் அவர்கள் கடந்த 10.12.2022 சனிக்கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார், அக்கரைப்பற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் கிராமசேவகர்) – தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தம்பிமுத்து பூரணம் (பளை) தம்பதியரின்ன் அன்பு மருமகனும், அருள்தேவியின் அன்புக் கணவரும், நகுலினி, பிரகதீஸ், நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுதினி, சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவ் அவர்களின் அன்புத் தாத்தாவும், இராமநாதன் (கல்லடி – மட்டக்களப்பு), காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சிவபாதசுந்தரம் மற்றும் சரஸ்வதி ( அக்கரைப்பற்று ), மங்கயற்கரசி ( கோளாவில் ), துளசிமலர் ( அக்கரைப்பற்று ) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி (லண்டன்), கோபாலகிருஷ்ணன் (லண்டன்) , கிருபாலட்சுமி (லண்டன்), இராஜலட்சுமி (லண்டன்), விஜயலட்சுமி (லண்டன்), திருமகள் (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராஜா (கொக்குவில்), உதயமலர் (லண்டன்), கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான சவுந்தராசா, விக்கிரமசிங்கம், பங்கயநாதன் மற்றும் பாலிப்போடி ஆகியோரின் மைத்துனரும், காராளசிங்கம், யோகநாதன், வன்னியசிங்கம், மகேந்திரலிங்கம், சுப்பிரமணியம், கஜேந்திரன் ஆகியோரின் சகலனும், சர்மிலா, சீதா, சுகீ, மதன், துளசி, பவித்திரன், பகிரதன், ரதன், கஜன்,பாணு,இந்து,கோபிகா,தனுஜன், மது,கிருசன்,ரேசி,டிசனி,கௌதம்,கபில்,சன்சே,கிருதிகா ஆகியோரின் பெரியப்பாவும் அனித்தா, அனுரன், வசிகரன், நர்தனா, திவிஜா, பிருந்தன், கபிலன், ரூபன், மதி, ஜெரட், ஜனனி, அனு, கோகுலன், சிவா, தனன்ஜயன் ஆகியோ ரின் மாமாவும், ஜஸ்வரியா, ஜனோசன், திஸ்யா, சரூஜா, கஜா, லசிஜன், பிரணவ், திஜா, பிரனீஸ், ரிஷன் சாய் ஆகியோரின பேரனும். பரமேஸ்வரி, நிர்மலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை 19.12.2022 திங்கட்கிழமை நண்பகல் 3.30 மணியளவில், Yarden House Yndyk 1, 9084 AV Goutum, Netherlands என்ற முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

**கண்ணன் - மைத்துனர்**

## பிரபல....

விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணையாளர்களிடம் வாக்கு மூலம் அளித்தவர்களில் ஷாப்டரின் மனைவி, குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸ் ஆகியோரும் அடங்குவர்.

இதேவேளை, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல வழங்கிய உத்தரவுக்கு அமைய பிரையன் தோமஸின் வெளிநாட்டு பயணங்கள் நேற்று முன்தினம் முதல் தடை செய்யப்பட்டன. இதற்கிடையில், தோமஸின் கைத்தொலைபேசி சி.ஐ.டி காவலில் எடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில், ஷாப்டர் சி.ஐ.டியில் ரூ.140 மில்லியன் நிதி மோசடியை செய்ததாக தோமஸுக்கு எதிராக புகார் செய்தார். இந்த சம்பவம் தொடர்பாக தோமஸ் 2021 இல் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். நாட்டிலுள்ள கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்வதாகக் கூறி தாமஸ் இந்தத் தொகையை ஷாப்டரிடம் கடனாகப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், ஷாப்டர் மற்றும் பிரையன் தோமஸின் கொலைக்கு இடையிலான தொடர்பு இன்னும் நிறுவப்படவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் வலியுறுத்தினார்.

வியாழன் மாலை பொரளையில் உள்ள பொது மயானத்தில் ஷாப்டர் தனது வாகனத்திற்குள் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். கொல்லப்பட்டவர் கடத்தப்பட்டு பொரளை பொது மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

51 வயதான குறித்த நபர் பிற்பகல் 2.00 மணியளவில் கறுவாத்தோட்டம் மலர் வீதியில் உள்ள வீட்டை விட்டு வெளியேறியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வியாழன் அன்று, அவரது மனைவி மற்றும் அவரது நிறுவனங்களில் ஒன்றின் தலைமை நிர்வாக அதிகாரி ஒருவருக்கும் தனக்கு ஒரு பெரிய தொகை கொடுக்க வேண்டிய ஒரு நபரைச் சந்திக்கப் போவதாகத் தெரிவித்தார்.

ஷாப்டரின் காருக்குள் ஒரு மின் குறியீட்டையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டி விசாரணை நடத்தி வருகிறது.

ஷாப்டரின் காரில் இருந்து அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நடந்து செல்வதை மயான தொழிலாளி பார்த்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், இறந்தவரின் எச்சங்கள் தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் நிறுவனத்தின் தலைமை மருத்துவ அதிகாரி முன் ஆஜர்படுத்தப்பட்டன.

பிரேத பரிசோதனையில் கழுத்து நெரிக்கப்பட்டதால் மரணம் நிகழ்ந்தது என தெரியவந்துள்ளது. (அ)

## அமெரிக்க....

பில் கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்.எம்.பெரேரா பொருளாதாரத்தை உயர்த்த பல வேலைத்திட்டங்களை செய்தார். ஆனால் தற்போது எதுவுமே இல்லை. இதனால் இளைஞர் யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இலாபம் தருகின்ற ஸ்ரீலங்கா ரெலிக்கொம், இலங்கை மின்சார சபை நிறுவனங்களைத் தனியாருக்கும் வெளிநாட்டுக்கு விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

தோட்டத்தொழிலாளர்களை உரிமையாளர்களாக மாற்றி குறிப்பிட்ட நிலங்களை அவர்களுக்கு வழங்கினால் அவர்கள் முழுமூச்சாக பாடுபட்டு டொலரை பெறலாம். இதனால் தேயிலை இறப்பர் மூலம் பெருமளவு டொலரை பெறமுடியும்.

செவிடன் காதில் ஊதிய சங்குபோல அரசாங்கம் இருக்கிறது. இந்நிலையை மாற்ற வேண்டும். லங்கா சமசமாஜக் கட்சி யாழ்ப்பாணத்தில் சாவிச் சின்னத்தில் எதிர்வரும் காலத்தில் போட்டியிடவிருக்கின்றது. இனமத பேதமில்லாமல் அனைவரும் வாக்களித்து எம்மை வெற்றி பெற வைக்க வேண்டும்-என்றார். (அ)

## அமைச்சரவை,....

பின்னர் அமைச்சரவையில் புதிதாக பத்து பேரையும், இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதற்கு சில இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த நிலைமை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"அமைச்சரவை" கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி, எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் நாள் வரை புதிய அமைச்சர்களை நியமிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது ஆளுநர்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஐவரை நியமிப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நான்கு பேரை புதிதாக நியமிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டு தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கடன்....

டத்தை விரைவாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்னைகளைக் கையாள்வதற்கான வாய்ப்புகள் குறித்து கடந்த வாரம் சீனாவுடன் அவர் பேச்சு நடத்தியிருந்தார்.

ஆகவே குறித்த நாடுகள் எதிர்கொள்ளும் கடன் பிரச்னைகளை கையாளமுடியும் என்றும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இருப்பினும் ஜி20 கட்டமைப்பின் கீழ் நிவாரணம் வழங்குவதில், சீனாவின் வகிபாகம் குறித்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் விரக்தியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காங்கேசன்....

பிக்கின்றன. எம்முடனும் கலந்துரையாடல் நடத்துகிறார்கள்.இது வர்த்தக கப்பல் சேவை. வத்தைகள் என அழைக்கப்படும் சிறிய கப்பல்கள்தான் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படும். அவை 1000 மெற் றிக் தொன்னுக்கும் குறைவாக கொள்ள ளவுடையவை-என்றார். (அ)

## கட்டைக்காடு....

இவர்கள் மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு அண்மித்த கடற்பகுதியில் பயணித்த வெளிநாட்டவர்கள் குழுவொன்றை ஏற்றிச் சென்ற கப்பலே விபத்துக்குள்ளாகியுள்ளது.

மியன்மாரில் இருந்து மலேசியா நோக்கி பயணித்த கப்பலே இவ்வாறு அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த கப்பல் பழுதடைந்து இலங்கை கடற்கரையை நோக்கி வந்துள்ளது.

அதன்படி, இலங்கை மீனவர்கள் குழுவொன்று தேவையான ஆதரவை வழங்கியதாகவும், பின்னர் காங்கேசந்துறைமுகத்தில் இருந்து நான்கு படகுகளில் கடற்படையினர் சென்று அவர்களை மீட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதில் சிறுவர்கள் உட்பட சுமார் 130 வெளிநாட்டவர்கள் இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்தக் கப்பல் தொடர்பான மேலதிக விவரங்கள் கடற்படையினரின் மீட்பு நடவடிக்கை முடிந்த பின்னரே தெரியவரும் எனக் கூறப்பட்டது. (அ)

# இந்தியாவின் தலைமையில் சர்வதேச தலையீட்டில் தீர்வு

## ஜனநாயகப் போராளிகள் கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

தமிழ் மக்களின் அரசியல் தீர்வை வென்றெடுக்க 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்து பிராந்தியங்களின் சுயாட்சி அதற்கு மேலான முறை ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் பிராந்திய வல்லரசான இந்தியா தலைமையிலான சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டின் கொள்கை விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஜனநாயக போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவர் சிவநாதன் நவீந்திரா (வேந்தன்) கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழப் போர் ஓய்வடைந்த பின்னர் சுமார் 13 வருடங்களில் கடந்த நிலையில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாம் இந்த மண்ணிலே தனக்குரிய வரலாற்று மாண்புகளுடனும் சுய நிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டும் எனில் எமக்கென்று ஓர் சுதந்திர தேசத்தை உருவாக்க வேண்டும் என பல தசப்தங்களாக போராடி இருக்கிறோம்.

ஜனநாயக ஏது நிலைகள் தகர்ந்துபோன சூழ்நிலையில் கட்டமைக்கப்பட்ட ஓர் இன அழிப்புப் முறையை எதிர்கொள்வதற்காக ஏந்தப்பட்ட ஆயுதங்கள் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக வியாபித்திருந்தது.

தாயக விடுதலைக்கான பல அர்ப்பணிப்புகள் கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில் திம்பு கோட்பாட்டில் இருந்து ஜெனிவா வரையிலான அரசியல் தீர்வு பற்றி பல முனைப்புகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

சிங்கள பௌத்தம் என்ற அரசியல் கோட்பாடு அதனை நிலை நிறுத்துவதற்காக தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியுமே இன்று வரை பிரச்னைக்கு மூலவேர் என்பதை இலங்கை சிங்கள தேசம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதை எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்காக பின்வரும் முன்மொழிவுகளை கொள்கை ரீதியாக பரிந்துரைக்கிறோம்.

தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் தமிழ் தேசியக் கட்சிகள் சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், போராளிகள் புலம் பெயர் தமிழர்களின் வகிபாகம் இருக்க வேண்டும்.

ஈழத் தமிழருக்கான அரசியல் தேர்வு முன்மொழிவை தமிழர் தரப்பின் ஏகோபித்த வரைவாக இலங்கை அரசுக்கும் ஏனைய வகிபாவங்களுக்கும் சமர்ப்பித்தல்.

எந்த ஒரு பேச்சு வார்த்தையின் போதும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் தலைமைத்துவத்தாடலான சர்வதேச மத்தியஸ்தம் மற்றும் 13வது திருத்தத்தை அடிப்படையாக வைத்து பிராந்தியங்களின் சுயாட்சி அதற்கு மேலான பொறிமுறை ஒன்றை தாபித்தல்.

மற்றும் ஈழத் தமிழருக்கான தீர்வு முயற்சிகள் சம்பந்தமான எந்த ஒரு பேச்சு வார்த்தை முனைப்பும் ஒரு காலவரையறையையும் அடிப்படையாக வைத்தே நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# இளைஞனும் யுவதியும் ரயில் மோதி உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 18

தெஹிவளை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் எதிரே வந்த ரயிலில் மோதி 22 வயதுடைய பெண்ணும் 22 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

தெஹிவளை விலங்கியல் பூங்காவை பார்வையிடுவதற்காக பலப்பிட்டிய தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் 12 பேர் கொண்ட குழு தெஹிவளை வந்த போது இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

களுத்துறை நோக்கிச் சென்ற மருதானை புகையிரதத்தில் மோதுண்ட குழுவில் உள்ள மூன்று மாணவர்கள், தண்டவாளத்தைக் கடப்பதற்கு மேம்பாலத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ரயில் பாதையின் குறுக்கே நடந்து சென்றுள்ளனர். (அ)

# 3 இலட்சம் அரச ஊழியர்களை பணியிலிருந்து நீக்கவேண்டும்!

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறுகிறது

கொழும்பு, டிசெ. 18

அரச சேவையிலுள்ள 15 லட்சம் அரச ஊழியர்களை 12 லட்சமாகக் குறைத்தால் பொது சேவைகள் ஆரோக்கியமான நிலையில் பயணிக்கும் என துறைசார் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்ன தெரிவித்தார்.

இதுவரை காலமும் அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு, வெற்றிடங்கள் இருக்கும் போது அல்ல மாறாக அரசாங்கத்தின் பல்வேறு கொள்கைத் தீர்மானங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டன என்றும், பொதுச் சேவை மிக எளிதாகப் பராமரிக்கப்படும் என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தினார்.

ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 ஆயிரம் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுவதுடன், இதே எண்ணிக்கையை மீண்டும் அரசுப் பணியில் அமர்த்தும் திட்டமும் சில காலமாக நடைமுறையில் உள்ளது.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ், பொதுச் செலவினங்களைக் குறைக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, ஓராண்டில் சுமார் இருபதாயிரம் அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றாலும், இவ்வளவு தொகை மீண்டும் அரசுப் பணியில் சேர்க்கப்படாது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அடுத்த சில வருடங்களில் அரச சேவையை படிப்படியாக குறைக்க முடியும் எனவும் செயலாளர் தெரிவித்துள்ளர். (அ)

## வடமாகாண....

படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த விடயம் தொடர் பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது, இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் அறியத்தரப்பட்டுள்ளது.

குறித்த உத்தியோகத்தரை தற்காலிகமாக இடைநிறுத்தி மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளதாகக் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# உலகக்கிண்ண இறுதி திருவிழா இன்று!

## மெஸ்ஸியின் காயத்தினால் தடுமாற்றத்தில் அர்ஜென்ரீனா

கட்டாரில் இடம்பெற்று வரும் உலகக் கிண்ண உதைபந்து திரு விழா இறுதிக் கட்டத்தை எட்டி யுள்ளது.

அந்தவகையில் இன்று ஞாயிற் றுக்கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் பிரான்ஸ்- அர்ஜென் ரீனா அணிகள் மோதவுள்ளன.

அர்ஜென்ரீனா முதல் போட்டி யில் சவுதி அரேபியாவுக்கு எதிராக தோல்வியைச் சந்தித்தது. இதனால் கடும் விமர்சனத்திற்கு உள்ளான அந்த அணியின் தலைவர் மெஸ் ஸிக்கு இதுதான் கடைசி உலகக் கிண்ணம். இதற்கு முன் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண் ணப் போட்டியில் அர்ஜென்ரீனா இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்தது.

இதனால் மெஸ்ஸிக்கு உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப் பில்லை என கருதப்பட்டது. ஆனால், அதன்பின் மெஸ்ஸி அபாரமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். இவரது சிறப்பான விளையாட்டால் தற்போது அர் ஜென்ரீனா இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

குரோசியாவுக்கு எதிரான அரை யிறுதிப் போட்டியில் பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி மெஸ்ஸி கோல் அடித்தார். அதன்பின் அல்வாரெஸ் கோல் அடிக்க துணை புரிந்தார்.

இந்த போட்டியின்போது மெஸ்ஸி தசைப்பிடிப்பால் அவ திப்பட்டாராம். 100 சதவீதம் உடற் தகுதியுடன் இல்லையாம். இருந்தா லும் விளையாடுகிறேன் என மெஸ்ஸி தன்னம்பிக்கையுடன் விளையாடி னாராம்.

தற்போது இடது காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டதன் காரணமாக நேற்று முன் தினம் நடைபெற்ற பயிற்சிப் போட்டில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளார். இதனால் அர்ஜென்ரீனா அணி மெஸ்ஸியின் காயத்தால் கவலையடைந்துள்ளது.

ஒரு வேளை இன்று பிரான்ஸ்க்கு எதிரான இறுதிப் போட்டியில் மெஸ்ஸி 100 சதவீத உடற்குதியுடன் விளையாடவில்லை என்றால், அது அர்ஜென்ரீனாவுக்கு மிகப்பெரிய இழப்பாகும் என்பதில் சந்தேக மில்லை.

டி மரியா அரையிறுதியில் காயம் காரணமாக விளையாடவில்லை. தற்போது அவர் உடற்தகுதி பெற்று விட்டதால் இறுதிப் போட்டியில விளையாட வாய்ப்புள்ளது.

இந்த உலகக் கிண்ணத்தில் மெஸ்ஸி 5 கோல் அடித்துள்ளார். 3 கோல் அடிக்கத் துணை புரிந்துள் ளார். அவருடன் எம்பாப்பேயும் 5 கோல் அடித்துள்ளார். இருவரும் இறுதிப் போட்டியில் நேருக்கு நேர் பலப்பரீட்சை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# அசார் அலி ஓய்வு!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான அசார் அலி, சர்வதேச கிரிக் கெட்டிலிருந்து ஓய்வுப் பெற போவதாக அறிவித் துள்ளார்.

தற்போது இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் அசார் அலி, நேற்று கராச்சியில் ஆரம்பமான டெஸ்டுடன் சர்வ தேச கிரிக்கெட்டுக்கு விடையளிப்பதாக அறிவித் தார்.

தனது ஓய்வுக் குறித்து அவர் கூறுகையில், '100 டெஸ்டுகளில் விளையாட வேண்டும் என விருப் பப்பட்டேன். இந்தப் பருவத்தில் எல்லா டெஸ்டு களிலும் விளையாடியிருந்தால் இந்த இலக்கை எட்டியிருப்பேன். இனி அது நடக்காது என்பதால் இளைஞர்களுக்கு வழி விட விரும்பினேன். இது என் சொந்த முடிவு. யாரும் என்னை வற்புறுத்த வில்லை' என கூறினார்.

2019ஆம் ஆண்டு சர்பராஸ் அஹமது நீக்கத்துக் குப் பிறகு பாகிஸ்தான் அணியின் தலைவராக 9 டெஸ்டுகளில் அசார் அலி பணியாற்றினார். இவ ரது தலைமையில் இலங்கை, பங்களாதேஷுக்கு எதிராக சொந்த மண்ணில் இரு டெஸ்ட் தொடர் களை பாகிஸ்தான் அணி வென்றது. எனினும் அச்சமயத்தில் அசார் அலி சரியாக விளையாடாத காரணத்தால் பாகிஸ்தான் அணியின் தலைவராக பாபர் ஆஸம் நியமிக்கப்பட்டார்.

லெக் ஸ்பின்னராக பாகிஸ்தான் அணியில் நுழைந்த அசார் அலி, பிறகு அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக மாறி 10 வருடங்களுக்கும் மேலாக விளையாடியுள்ளார்.

பாகிஸ்தான் அணிக்காக 2010 முதல் 96 டெஸ் டுகள், 53 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள் ளார். டெஸ்டில் 7097 ஓட்டங்களை குவித்துள்ளார். 19 சதங்கள், 35 அரை சதங்கள் அடித்துள்ளார். கடந்த 2018ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் விளையாடவில்லை.

டெஸ்ட் கிரிக்கெட்டில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக முச்சதம் அடித்த அசார் அலி. பகலிரவு டெஸ்டில் முச்சதம் அடித்த ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

(அ)

# போர்த்துக்கல் பயிற்சியாளர் சாண்டோஸ் பதவி விலகல்

பிபா உலகக் கிண்ண காலிறுதியுடன் போர்த்துக்கல் வெளியேறியதைத் தொடர்ந்து, தலைமை பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண்டோஸ் பதவி விலகியுள்ளார்.

கட்டார் உலகக் கோப்பையின் எச் பிரிவில் முதலிடத்தை பிடித்த போர்த்துக்கல், காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சுவிற்சர்லாந்தை 6-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு நுழைந்தது.

போர்த்துக்கலின் ஆட்டம் கவனிக்கத்தக்க விதத்தில் அமைந்திருந்தாலும், காலிறுதியுடன் வெளியேறியது. மொராக்கோவிடம் 0-1 என்ற அதிர்ச்சியூட்டும் தோல்வியை சந்தித்தனர்.

போர்த்துக்கல்லின் கடைசி இரண்டு போட்டிகளும் சர்ச்சைகளாகின. நட்சத்திர ஸ்ட்ரைக்கர் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண்டோஸ் ஆகியோரிடையே ஒற்றுமையிருக்கவில்லை.

இரண்டு போட்டிகளின் பின்னர் அவர்களது உறவு கசப்பாக இருப்பது தெரிய வந்தது.

காலிறுதிப் போட்டியிலும், அதற்கு முந்தைய போட்டியிலும் ரொனால்டோவை பெஞ்சில் உட்கார வைத்தார் பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண்டோஸ்.

மொராக்கோவிற்கு எதிரான போட்டியின் இரண் டாம் பாதியில் ரொனால்டோ களமிறக்கப்பட்ட போதும், அவராலும் அணியை வெற்றியடைய வைக்க முடியவில்லை.

கடைசி இரண்டு போட்டிகளிலும் ரொனால்ட்டோ பெஞ்சில் உட்கார வைக்கப்பட்டமைக்கு பயிற்சியாளர் கடுமையான விமர்சனத்தை சந்தித்தார். எனினும், அந்த முடிவிற்காக வருத்தப்படவில்லையென அவர் பின்னர் கூறியிருந்தார்.

"இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை, வருத்தமில்லை. கிறிஸ்டியானோ ஒரு சிறந்த வீரர், அது அவசியம் என்று நாங்கள் நினைத்தபோது அவர் உள்ளே வந்தார். அதனால் வருத்தமில்லை, "என்று மொராக்கோவுக்கு எதிரான போட்டிக்குப் பிறகு சாண்டோஸ் கூறினார்.

போர்த்துக்கல் உதைபந்துக் கூட்டமைப்பு வியாழக் கிழமை வெளியிட்ட அறிக்கையில், "உலகக் கிண்ணத் தின் இறுதிக் கட்டத்தில் தேசிய அணி எப்போதும் சிறந்த பங்கேற்பிற்குப் பிறகு, ஒரு புதிய சுழற்சியைத் தொடங்க இது சரியான தருணம் என போர்த்துக்கல் உதைபந்து கூட்டமைப்பு மற்றும் பெர்னாண்டோ சாண்டோஸ் புரிந்துகொள்கிறார்கள்" என கூறியது.



பெர்னாண்டோ சாண்டோஸ் 2014ஆம் ஆண்டு போர்த்துக்கல் பயிற்சியாளராக இணைந்தார். (அ)

# இலங்கை கிரிக்கெட் தேர்தலை நடத்த 3 பேர் கொண்ட குழு

இலங்கை கிரிக்கெட் நிறு வனத்தின் தேர்தலை நடத்துவ தற்காக ஓய்வுபெற்ற மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதிபதி மாலானி குணரத்ன தலைமையில் மூன்று பேர் கொண்ட தெரிவுக்குழுவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நியமித்தது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஷிரோமி பெரேரா மற்றும் இலங்கை நிர்வாகசேத்தின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரி சுனில் சிறிசேன ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட்டின் அடுத்த தேர்தல் அடுத்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி ஸ்ரீதரன்

யாழ். புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 2ம் வட்டாரம், சுவிஸ் ஆகிய இடங்களை வதி விடமாகவும், முல்லைத்தீவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஸ்ரீதரன் கடந்த 15-12-2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மரு மகனும், தவமலரின் அன்புக் கணவரும், சுதாகர், லவன், விஸ்ணு, மைதிலி, சஞ்ஜீ ஆகியோரின் அன்புத் தந்தை யும், சுலக்ஷனா, பிரதீபா, கிருஷ்ணச்செல்வன் ஆகியோ ரின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான புஸ்ப மலர், மோகனகுமார் மற்றும் சௌந்தரராஜா, மங்கையற் கரசி, விஜயலலிதா, கௌரிமலர், ஆனந்தராசா ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், சயன், ஜினுசிகா, சயூசன், சாதனா, கபிசன், சுலோஜா, ஆதர்ஷ், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை 19.12.2022 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில், குட்டிப்பிள் ளையார் கோவிலடி, வாட் நம்பர்-01, புதுகுடியிருப்பு எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தகவல்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.